
பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | தை 30 திங்கட்கிழமை 12.02.2018 | கதிர் 99




# துரோகத் தலைமைகளை துரத்தினால் கூட்டமைப்புடன் இணைந்து பயணம்!

## கஜேந்திரகுமார் நேற்று அதிரடி அறிவிப்பு



யாழ்ப்பாணம், பெப்ரவரி 12

"இலங்கை அரசின் நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்பட்டுத் தமிழ் மக்களுக்கு நம்பிக்கைத் துரோகமிழைத்துவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள துரோகத் தலைமைகள் வெளியேற்றப்பட்டால் நாம் அந்த அமைப்போடு இணைந்து செயற்படுவது தொடர்பில் பரிசீலிக்கமுடியும்."

- இவ்வாறு நேற்றுப் பகிரங்கமாக அறிவித்தார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

பக்கம் 18 »

### பூநகரி, ஊர்காவற்றுறை தவிர

# வட மாகாணத்தில் எல்லா சபைகளும் தொங்கு நிலையில்!

நேற்று முன்தினம் நடைபெற்றஉள்ளூராட்சித் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் உள்ள 34 சபைகளில் பூநகரி பிரதேச சபை, ஊர்காவற்றுறை தவிர்ந்த ஏனைய சபை

பக்கம் 03 »

# மஹிந்தவின் பேரெழுச்சியை எதிர்கொள்ள இணைவோம்!

## தமிழ்க் கட்சிகளுக்கு கூட்டமைப்பு அழைப்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பெப். 12

தெற்கில்எழுந்துள்ளபெரும் சவாலை எதிர்கொள்ளவதற்கு ஒரே கொள்கையைக் கொண்ட தமிழ்க்கட்சிகள்ஒன்றிணைவது அத்தியாவசியமானதும் அவசரமானதுமாகும். தமிழ் மக்களின் அரசியல் வேணவாவை வென்றெடுப்பதற்காக,சமஷ்டித் தீர்வை வலியுறுத்தி நிற்கும் தமிழ்க்கட்சிகள்ஒன்றிணைந்து பயணிக்க அழைப்பு விடுகின்றேன்

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பி

பக்கம் 18 »

# ஆட்சி முறையை மாற்றுவதற்கு மைத்திரிக்கு சு.க. காலக்கெடு



கொழும்பு, பெப். 12

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் பல்வேறு திருப்பங்களை ஏற்படுத்தியுள்ள நிலையில் எதிர்வரும் சில நாள்களில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மக்கள் உணரக் கூடிய மாற்றமொன்றை ஏற்படுத்தவுள்ளார் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.

பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளின் அதிகாரத்தை வசப்படுத்தியுள்ள முன்னாள் ஜனாதிபதி

பக்கம் 18 »

# ஈ.பி.டி.பியுடன் தமிழரசுக் கட்சி மோதல் தவிர்ப்புக்குத் தயாராம்!

## முக்கிய தலைவர் ஒருவர் டக்ளஸுக்குத் தகவல்

யாழ்ப்பாணம், பெப்.12

தொங்கு நிலையில் உள்ள சில உள்ளூராட்சி சபைகளில்நிர்வாகத்தைக் கொண்டு நடத்துவதற்கு வசதியாக ஈ.பி. டி.பியுடன் பரஸ்பர மோதல் தவிர்ப்பு உடன்பாட்டுக்குவருவதற்கு தமிழரசுக் கட்சி தயாராம்.

இதுதொடர்பானதகவல் தமிழரசுக்கட்சியின்முக்கிய தலைவர் ஒருவரினால் - இடைப் பிரமுகர் ஒருவர் ஊடாக - ஈ.பி. டி.பி. செய

பக்கம் 03 »

# நாடாளுமன்றைக் கலைக்க கோருகிறார் நாமல் எம்.பி.

கொழும்பு, பெப். 12

நாடாளுமன்றைக் கலைக்குமாறு கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கோரியுள்ளார். அரசால் முன்னெடுக்கப்

பக்கம் 18 »

### மஹிந்தரின் விஸ்வருபத்தால்

# ஆளும் தரப்புக்குள் பெரும் குழப்பம்!

கொழும்பு, பெப். 12

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித்தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தென்னிலங்கையில் அதீத வெற்றியீட்டியிருக்

பக்கம் 18 »

# அரசில் அதிரடி மாற்றம்!

### ஜனாதிபதி மைத்திரி திட்டம்

கொழும்பு, பெப் .12

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளின் பிரகாரம், எதிர்வரும் ஓரிரு நாள்களில் அரசில் பாரிய மாற்றத்தைத் தாம் ஏற்படுத்தவுள்ளார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பக்கம் 18 »

# 'நல்லாட்சி அரசு' இனியும் பதவியில் தொடர்வதற்கு ஆணை கிடையாது!

## விலகுமாறு கோருகிறார் மஹிந்தர் அணியின் பீரிஸ்

கொழும்பு, பெப். 12

"ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன - பிரதமர் ரணில்விக்கிரமசிங்கஆகியோரின் கூட்டுஅரசு இனியும்பதவியில்தொடர முடியாது. அதற்கானஆணை இதற்குப்பின்னரும்அந்த அரசுக்குக் கிடையாது. ஆகையினால் அந்த அரசு உடனடியாகப் பதவி

பக்கம் 03 »

### இனிது ரகசியம் அல்ல!

*"சமஷ்டி தீர்வை வலியுறுத்தி நிற்கும் தமிழ்க் கட்சிகளை எல்லாம் ஒன்றிணைந்து பயணிக்க அழைக்கிறேன்."* என்று புது அழைப்பு ஒன்றை சுமந்திரன் எம்.பி. விடுத்திருக்கின்றமை பலரின் புருவத்தையும் உயர்த்த வைத்திருக்கின்றது.

பக்கம் 03 »

### ஐ.தே.க.செயலரும் இராஜினாமா?

ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் கபீர் காசீம் அந்தப் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து இராஜினாமா செய்யவுள்ளார் என ஐ. தே. க. தகவல்கள் தெரிவிக்கின்றன.

தனது இராஜினாமாக் கடிதத்தை கட்சியின் தலை

பக்கம் 18 »

# சு.கவினரை மஹிந்த தரப்புடன் இணையுமாறு பகிரங்க அழைப்பு

கொழும்பு, பெப். 12

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூட்டரசை விட்டுவிலகி, வெளியேறி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தரப்புடன் இணைய வருமாறு அரசுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி

பக்கம் 03 »

# ஐ.தே.கவின் தோல்விக்கு முக்கிய காரணம் என்ன?

## ஜயவிக்ரம விளக்கம் கூறுகிறார்!

கொழும்பு, பெப். 12

ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி தண்டனை வழங்க தாமதமாகியமையே இதுவரை வெளியாகியுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளின் பின்னடைவுக்கான காரணம் என அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.



தற்பொழுது வெளியாகிக் கொண்டிருக்கும் தேர்தல் முடிவுகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.

# புதிய அரசை அமைப்பதற்கு ஜனாதிபதி முன்வரவேண்டும்!

## பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

கொழும்பு, பெப். 12

வெளியாகியுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலு டன், மக்களின் அபிப்பிராயங்களில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள் ளார்.



எனவே, எதிர்காலத்தில் என்ன செய்ய வேண்டும் என்பதை ஜனாதிபதி தீர்மா னிக்க வேண்டும் என்றும் பிரதமரை பதவி நீக்கிவிட்டு புதிய அரசை அமைப்பதற் குத் தேவையான நடவடிக்கைகளை ஜனாதிபதி மேற் கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகளை வெளியிடும் பத்தலகெதர வித்தியாலய மத்திய நிலைய வளாகத்தில் வைத்து நேற்று இவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# காத்தான்குடி மக்களுக்கு ஜனாதிபதி விசேட நன்றி!

கொழும்பு, பெப். 12

சகல வட்டாரங்களிலும் வெற்றி பெற்று தனிப்பெரும்பான்மையுடன் காத்தான்குடி நகர சபையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியமைப் பதற்கு ஒத்துழைப்பு வழங்கிய காத் தான்குடி மக்களுக்கும், இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கி றேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



புனர்வாழ்வு மற்றும் மீள் குடி யேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் நேற்றுக் காலை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவரும், ஜனாதிபதியு மான மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் இரா ஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் கருத்துத் தெரிவிக்கையில்–

உள்ளூராட்சி தேர்தல் முடிவுக ளுக்கு அமைய ஸ்ரீலங்கா சுதந்தி ரக் கட்சி சகல வட்டாரங்களிலும் வெற்றி பெற்று தனிப்பெரும்பான் மையுடன் ஆட்சியமைத்த ஒரே ஒரு நகர சபை கத்தான்குடி நகர சபை மாத்திரமே.

இதற்காக கட்சித் தலைவரும், ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன எனக்கும், வாக்களித்த காத்தான்குடி மக்களுக்கும் விசேட நன்றிகளையும் – பாராட்டுக்களை யும் தெரிவித்துக் கொண்டார்.

அத்துடன், வெகுவிரைவில் காத்தான்குடிக்கு தான் வரவுள் ளேன் என்றும் ஜனாதிபதி என்னிடம் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சி சார்பில் போட்டியிட்டு தேர்தலில் வெற்றி பெற்ற உறுப்பி னர்களுக்கு விசேட நிதி ஒதுக்கீடு களை செய்து பெரும் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கு ஒத் துழைப்பு வழங்குவதாகவும் ஜனா திபதி இதன் போது உறுதி வழங்கி னார்.

மட்டக்களப்பு, ஏறாவூர், காத்தான் குடி உள்ளிட்ட மட்டக்களப்பு மாவட் டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஆதரவு வழங்கிய சகலருக்கும் எனது சார்பிலும் கட்சித் தலைவர் சார்பிலும் நன்றிகளைத் தெரிவித் துக் கொள்கின்றேன்.

விசேடமாக காத்தான்குடி மக்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கை வீண்போகாமல் நாங்கள் எமது பணிகளைச் சரியான முறையில் முன்னெடுப்போம்.

ஜனாதிபதியின் மனங்களில் காத்தான்குடி மக்கள் தொடர் பிலும் – முஸ்லிம்கள் தொடர்பிலும் நன் மதிப்பு ஏற்பட் டுள்ளது. இந்தச் சூழலை ஏற்படுத்தவே நாங்கள் பாடுபட்டோம் என்றும் அவர் தெரி வித்துள்ளார்.

# வெற்றியின் பின் எம்மை நாடி வருபவர்களை ஏற்றுக்கொள்ளமாட்டோம்!

## பொதுஜன பெரமுன

கொழும்பு, செப்.12

உள்ளூராட்சிமன்ற தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் கட்சியுடன் இணைய வருபவர்களை ஏற்றுக்கொள்ளப் போவ தில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெர முன அறிவித்துள்ளது.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சிமன்ற தேர்தலின் முழுமையான முடிவுகளும் இதுவரை வெளியாகாத போதும், வெளி யாகியுள்ள முடிவுகளின் படி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பெரும்பான்மை வாக் குகளால் வெற்றிபெறும் என எதிர்பார்க் கப்படுகிறது.

இந்நிலையிலேயே அந்தக் கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒரு வர் இந்தத் தகவலை தெரிவித்துள்ளார்.

# ஒரு சில காரணங்களால் முடிவுகளை உடனுக்குடன் அறிவிப்பதில் சிரமம்

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெண்ணும் பணிகள் நிறைவடைந்த போதிலும் ஒரு சில காரணங்களால் முடிவு களை உடனுக்குடன் அறிவிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது என தேர்தல் கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய நேற்றுத் தெரி வித்திருந்தார்.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய ஊடகங்க ளுக்கு அனுப்பிவைத்த விசேட ஊடக அறிக்கையிலேயே இதனைத் தெரி வித்துள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வரு மாறு:–



வட்டாரங்களில் வாக் கெண்ணும் நடவடிக்கைகள் நிறைவடைந்து பெறுபேறுகள் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு தொலைநகல் மற் றும் தொலைபேசி மூலமாக கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்த நிலையில், அந்தப் பெறு பேறுகளை உற்றுநோக்கிதபால் மூல வாக்களிப்பு முடிவுகளுடன் இணைத்து வெளியிட வேண்டியுள்ளதுடன் சில மாவட்ட செயலகங்களில் இருந்து பூரண தேர்தல் முடிவுகள் கிடைக்கா மையால், முழுமையான பெறுபேறு களை வெளியிடுவதற்கு தெரிவத் தாட்சி அதிகாரிகள் சிரமத்தை எதிர் கொண்டுள்ளனர்.

ஆகையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளை வெளியிடுவ தற்கு போதியகால அவகாசம் தேவை யென்பதுடன் வட்டார முடிவுகளை கணினி மயப்படுத்தி தரவுக்கட்டமைப் புக்கள் இணைக்க வேண்டியுள்ளது.

இதனால், தேர்தல் முடிவு களை உடனுக்குடன் வெளியிடுவதில் தாமதம் ஏற்படும். ஆகவே, தேர்தல் முடிவுகள் வெளியிடும் வரை பொறு மைகாக்குமாறு தேர்தல்கள் ஆணை யாளர் மஹிந்த தேசப்பிரிய நேற்றுக் காலை விசேட ஊடக அறிக்கை மூலம் தெரிவித்தார்.

# வெற்றி கொண்டாட்டத்தில் வேட்பாளர்களும், ஆதரவாளர்களும்!







கொழும்பு, செப். 12

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு வரும் நிலையில் மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் இரவு முதல் வெற்றி பெற்ற வேட்பாளர்கள் கொண் டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாநகரசபை, இரு நகரசபை, 9 பிரதேச சபைகளுக்கான தேர்தல் நிறைவடைந்து வாக்கு எண்ணும் பணிகளை தொடர்ந்து முடிவுகள் அறிவிக்கப்பட்டு வந் தன.

இந்த நிலையில் வெற்றி பெற்ற வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் மகிழ்ச்சி ஆரவாரங்களில் நேற்று முன் தினம் மாலை முதல் ஈடுபட்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு மாநகரசபை யில் திசவீரசிங்கம் சதுக்கம், கூழாவடி, கல்லடி தொடக்கம் மஞ்சந் தொடுவாய் வரையில் வெற்றி பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் வெற்றிக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இதனடிப்படையில் ஆலயங்களுக்குச் சென்று ஆதரவாளர்களுடன் வழிபாடுகளை மேற்கொண் டுள்ளனர்.

# தேர்தல் முடிவுகள்

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களின் பிரதான முடிவுகள் 10, 11, 12ஆம் பக்கங்களில் பிரசுரமாகியுள்ளன.

அவற்றில் இடம்பெறாத - யாழ். மாவட்ட முடிவுகள் - இங்கு இடம்பெறுகின்றன:-

**யாழ்.மாநகர சபை**

| | |
|---|---|
| தமிழரசு கட்சி | - 16 |
| ஈழமக்கள் ஜனநாயக கட்சி | - 10 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | - 13 |
| தமிழர் விடுதலைக்கூட்டணி | - 01 |
| ஐக்கிய தேசிய கட்சி | - 03 |
| ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி | - 02 |

**சாவகச்சேரி நகர சபை**

| | |
|---|---|
| தமிழரசு கட்சி | - 05 |
| ஈழமக்கள் ஜனநாயக கட்சி | - 03 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | - 06 |
| ஐக்கிய தேசிய கட்சி | - 01 |
| ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி | - 02 |
| தமிழர் சமூக ஜனநாயக கட்சி | - 01 |

**வல்வெட்டித்துறை நகரசபை**

| | |
|---|---|
| தமிழரசு கட்சி | - 07 |
| ஈழமக்கள் ஜனநாயக கட்சி | - 02 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | - 02 |
| தமிழர் விடுதலைக்கூட்டணி | - 01 |
| ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி | - 01 |
| சுயேட்சை குழு | - 04 |

**வடமராட்சி தென் மேற்கு பிரதேச சபை**

| | |
|---|---|
| தமிழரசு கட்சி | - 09 |
| ஈழமக்கள் ஜனநாயக கட்சி | - 03 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | - 07 |
| தமிழர் விடுதலைக்கூட்டணி | - 03 |
| ஐக்கிய தேசிய கட்சி | - 02 |
| ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி | - 07 |

**வலி. வடக்கு பிரதேச சபை**

| | |
|---|---|
| தமிழரசு கட்சி | - 17 |
| ஈழமக்கள் ஜனநாயக கட்சி | - 08 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | - 06 |
| தமிழர் விடுதலைக்கூட்டணி | - 02 |
| ஐக்கிய தேசிய கட்சி | - 02 |
| ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி | - 04 |

**வலி. கிழக்கு பிரதேச சபை.**

| | |
|---|---|
| தமிழரசு கட்சி | - 13 |
| ஈழமக்கள் ஜனநாயக கட்சி | - 06 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | - 06 |
| தமிழர் விடுதலைக்கூட்டணி | - 03 |
| ஐக்கிய தேசிய கட்சி | - 01 |
| ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி | - 03 |
| சுயேட்சை குழு | - 04 |

**வலி.தென் மேற்கு பிரதேச சபை**

| | |
|---|---|
| தமிழரசு கட்சி | - 12 |
| ஈழமக்கள் ஜனநாயக கட்சி | - 07 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | - 04 |
| தமிழர் விடுதலைக்கூட்டணி | - 02 |
| ஐக்கிய தேசிய கட்சி | - 02 |
| ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி | - 01 |

**ஊர்காவற்றுறை பிரதேச சபை**

| | |
|---|---|
| தமிழரசு கட்சி | - 05 |
| ஈழமக்கள் ஜனநாயக கட்சி | - 07 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | - 01 |

# குறுகிய அரசியல் லாபங்களுக்காக சந்தர்ப்பவாத கூட்டுகள் வேண்டாம்!

## ரெலோ ஸ்ரீகாந்தா வலியுறுத்தல்

குறுகிய அரசியல் லாபங்களுக்காக சந்தர்ப்பவாத கூட்டணிகளை நாம் அமைக்க முடியாது என ரெலோவின் செயலாளர் நாயகமும் சட்டத்தரணியுமான என்.ஸ்ரீகாந்தா தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் நடைமுறைப் படுத்தப்பட்ட புதிய தேர்தல் முறைமை வடக்கில் மாத்திரமன்றி தெற்கிலும் கூட பல உள்ளூராட்சி சபைகளில் சிக்கலை தோற்றுவித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

வடக்கிலும் கிழக்கிலும் பெரும்பாலான சபைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதலிடத்தைப் பிடித்துள்ள போதிலும், ஆட்சி அமைப்பதில் முட்டுக்கட்டை தோன்றியுள்ளது.

இருந்தாலும், ஸ்திரமான நிர்வாகத்தை இச் சபைகளில் நிறுவ வேண்டியது கூட்டமைப்பின் கடமையாக உள்ளது.

அதே நேரத்தில் குறுகிய அரசியல் லாபங்களுக்காக சந்தர்ப்பவாத அடிப்படையில் கூட்டணிகளை நாம் அமைக்கவும் முடியாது.

இந்தப், பிரச்சினையை எதிர்கொள்வதில் நிதானத்தோடும் பொறுப்புணர்வோடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட வேண்டிஉள்ளது.

அவ்விதம் செயற்பட வேண்டுமென்பதையே கூட்டமைப்பிற்கு வாக்களித்த பெரும்பான்மைத் தமிழ் மக்கள் அனைவரும் எதிர்பார்க்கின்றனர் என்பதை இச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கின்றது. - இப்படி அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மாத்தறையில் தமிழர் தெரிவு



தென்னிலங்கை அரசியல் வரலாற்றில் முதல் முறையாக தென்மாகாணத்தில் தமிழர் ஒருவர் பிரதேசசபைக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

மாத்தறை மாவட்டத்தில் கொட்டப்பொல பிரதேசசபைக்கு ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் போட்டியிட்ட தமிழர் ஒருவரே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நாகவேலு ராஜ்குமார் என்பவரே ஐக்கிய தேசிய கட்சியின் சார்பில் 917 வாக்குகளைப்பெற்று கொட்டப்பொல பிரதேசசபைக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

# 4 சபைகள் மு.காவுக்கு!

இதுவரை வெளியாகியுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் 4 சபைகளில் தனியாக நிர்வாகத்தை அமைக்கும் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

இதுவரைவெளியாகியுள்ள 327 சபைகளின் முடிவுகளின் அடிப்படையில் ஸ்ரீ ல.மு.கா. 20 உள்ளூராட்சி சபை உறுப்பினர்களைப் பெற்றுள்ளது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கடந்த 2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் 72 உறுப்பினர்களைப்பெற்றுக் கொண்டதுடன், 5 சபைகளின் அதிகாரங்களைப் பெற்றிருந்தது.

## ஈ.பி.டி.பியுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கு தெரியப்படுத்தப்பட்டிருக்கின்றது என நம்பகரமாக அறிய வந்திருக்கிறது.

"நெடுந்தீவு பிரதேச சபையை ஈ.பி.டி.பி. தலைமையின்றி நிர்வகிப்பதற்கு தமிழரசுக் கட்சி ஒத்துழைக்கும் அதேசமயம், யாழ். மாநகர சபை உட்பட தமிழரசுக் கட்சி வசம் இருக்கும் சில உள்ளூராட்சி சபைகளை நிர்வகிக்க ஈ.பி.டி.பி. ஒத்துழைக்க வேண்டும். அதற்கேற்ற வகையில் மேற்படி சபைகளில் இரு தரப்பும் மோதல் தவிர்ப்பு இணக்கம் ஒன்றுக்கு முன்வரவேண்டும்."

- இத்தகைய யோசனை ஒன்றே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கிய தலைவர் ஒருவரினால் ஒரு பிரமுகர் மூலம் டக்ளஸ் தேவானந்தா எம்.பிக்கு தெரியப்படுத்தப்பட்டதாகக் கூறப்பட்டது.

இது குறித்து நேற்றிரவு டக்ளஸ் தேவானந்தா எம்.பியுடன் தொடர்புகொண்டு கேட்டோம்.

"ஆம் அத்தகைய யோசனை ஒன்று ஒரு முக்கிய பிரமுகர் மூலம் எனக்குத் தெரியப்படுத்தப்பட்டது என்பது உண்மையே. எது, எப்படியென்றாலும், எமது கட்சியின் உயர்பீடம் கூடி ஆராய்ந்த பின்னரே இந்த யோசனையை சாதகமாகப் பரிசீலிக்க முடியுமா என்பது குறித்து பதிலளிக்க இயலும் என நான் தெரிவித்துள்ளேன்." என்றார் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. (உ)

## வட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் அனைத்திலும் எந்தக் கட்சியும் அறுதிப்பெரும்பான்மை பெறாத நிலை யில் தொங்கு சபைகள் உருவாகியுள்ளன. ஊர்காவற்றுறை பிரதேச சபையில் ஈ.பி.டி.பியும், பூநகரி பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெற்றுள்ளன.

பருத்தித்துறை, சாவகச்சேரி, நகர சபைகளில் இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி தனித்து அதிக ஆசனங்களைப் பெற்றுள்ளது. நெடுந்தீவில் ஈ.பி.டி.பி. தனித்து அதிக இடங்களைக் கைப்பற்றியுள்ளது.

ஏனைய இடங்களில் தமிழரசுக் கட்சி அதிக இடங்களைப் பிடித்துள்ளது.

எனினும், அச்சபைகளில் தனித்துஆட்சிஅமைக்கமுடியாத சூழலில் கட்சிகள், புதிய அணிகளைச் சேர்ப்பதற்கான பேரம் பேசலை ஏற்கனவே ஆரம்பித்துவிட்டன எனக் கூறப்படுகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேச சபையை முழுமையாக பெரும்பான்மையுடன் கைப்பற்றியுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஏனைய இரு சபைகளான பச்சிலைப்பள்ளி, பளைபிரதேசசபைகளில் அறுதிப் பெரும்பான்மையை விட ஓர் ஆசனம் குறைவாகப் பெற்றுள்ளது. (உ)

## நல்லாட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலக வேண்டும்.."

- இவ்வாறு கோரியிருக்கின்றார் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனைக் கட்சியின் தலைவரானபேராசிரியர்ஜி.எல்.பீரிஸ்.

உள்ளூராட்சித் தேர்தலில் மஹிந்தராஜபக்ஷவின்வழிகாட்டலில் இயங்கும் அவரது கட்சி பெரு வெற்றியீட்டி வரும் சூழலியேயே இந்த அழைப்பை அவர் விடுத்திருக்கின்றார்.

"இந்தத் தேர்தல் அரசின் கொள்கைகள், செயற்பாடுகளுக்கான ஒரு கருத்துக் கணிப்பு. இந்த அரசையும், அதன் ஆளுகையையும் நாட்டு மக்கள் அடியோடு - ஒருங்குசேர நிராகரித்து விட்டார்கள் என்பதற்கான மக்கள் தீர்ப்பே இந்தத் தேர்தல் முடிவுகள். ஆகவே இந்த அரசு ஆட்சியில் தொடருவதற்கு எந்தத் தார்மீக உரிமையும் அதற்குக் கிடையாது.

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தொண்டர்களும் உறுப்பினர்களும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கட்சித்தலைவராக ஏற்கத் தயாரில்லை, அவரது தலைமையை நிராகரித்துள்ளனர் என்பதையே இந்த மக்கள் தீர்ப்பு காட்டுகின்றது - என்றும் அவர் கூறினார்.

## சு.கவினரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்.பிக்களுக்கு அழைப்பு விடுத்திருக்கின்றது மஹிந்தராஜபக்ஷ தரப்பு.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சார்பில் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட 96 எம்.பிக்களில் 56பேர் இப்போது மஹிந்த ராஜபக்ஷ தரப்பில் உள்ளனர்.

இவர்களே எஞ்சிய எம்.பிக்களை மஹிந்த தரப்புடன் வந்து இணையுமாறு அழைப்பு விடுத்திருக்கின்றனர்.

அந்த 56 எம்.பிக்களினதும் சார்பில் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பவித்திரா வன்னியாராய்ச்சி இந்த அழைப்பை விடுத்தார்.

அரசுத் தரப்பில் எஞ்சி இருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம்.பிக்களையும் தம் பக்கம் இழுத்துக் கொண்டு அவர்களையும் சேர்த்தபடி நாடாளுமன்றத்தில் எதிரணி வரிசையில் அமர்வதும் -

அதன் மூலம் அரசிலிருந்து சு.க.தரப்புகள் முழுமையாக வெளியேறி எதிர்க்கட்சி வரிசைக்கு வந்துவிட்டன எனக் காட்டி, எதிர்க்கட்சித் தலைவர் பதவியை சம்பந்தனிடம் இருந்து பிடுங்கி, தற்காலிகமாக மஹிந்த ராஜபக்ஷவிடம் அல்லது அவரது தரப்பினரிடம் கையளிப்பதும் -

இப்படி அரசுத் தரப்பிலிருந்து சு.கவின் எஞ்சிய எம்.பிக்கள் அனைவரையும் வெளியேறுமாறு கோரும் அழைப்பின் பின்னால் புதைந்து கிடக்கும் திட்டம் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சித் தேர்தலில் மஹிந்தராஜபக்ஷ எழுச்சிகொண்டுள்ள சூழலில் அந்த எழுச்சியை எதிர்கொள்வதற்காகவே சுமந்திரன் இந்த அழைப்பை விடுகின்றார் எனக் கூறப்பட்டது.

ஆனால், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி கடந்த பொதுத் தேர்தலுடன் ஒப்பிடுகையில் -

தனது வாக்கு வங்கியை நான்கு மடங்கிலும் அதிகமாக உயர்த்தி, எழுச்சி கொண்டிருக்கையில் -

அவ்விடயத்தில் தமிழ்க் கூட்டமைப்பின் - தமிழரசுக் கட்சியின் - வீழ்ச்சிக்கும் பின்னடைவுக்கும் சுமந்திரனும் அவரைச் சார்ந்த நால்வர் அணியுமே (அஸ்மின், ஆனோல்ட், சம்பந்தன், சுகிர்தன்) பொறுப்பேற்க வேண்டிய சூத்திரதாரிகள் எனக் கூறப்படும் பின்னணியில் -

இந்த அழைப்பை அவர் விடுத்திருக்கின்றார். ஆனால் யாரை இலக்கு வைத்து என்பது தான் கேள்வி.

சமஷ்டித் தீர்வுக்கு இணங்கி நின்ற ஈ.பி.ஆர்.எல்.எவ். ஏற்கனவே கூட்டமைப்பிலிருந்து விலகப்பட்டு விட்டது.

இணைவதற்குத் தயாராக வந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியை - சமூக ஜனநாயகக் கட்சியை - புறமொதுக்கியாகி விட்டது.

இனி எந்தத் தமிழ்க் கட்சி மிஞ்சியிருக்குகின்றது சுமந்திரன் அழைப்பதற்கு? தமிழ்க் காங்கிரஸா? அல்லது ஈ.பி.டி.பியா?

சுமந்திரன் குழுவின் அரசியல் அணுகுமுறையால் தொங்கு நிலையிலேயே பல உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றக்கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள தமிழரசுக் கட்சித் தரப்புக்கு இந்தச் சபைகளில் மீட்சி கொடுக்கக் கூடிய தரப்புகள் இந்த இரண்டு கட்சிகளும்தான்.

ஏற்கனவே ஈ.பி.டி.பிக்கு தூண்டில் போட்டாயிற்று என்று தகவல். ஆனால் மஹிந்தவின் பேரெழுச்சியை எதிர்கொண்டு சமாளிக்க என்ற தோரணையில் விடுக்கப்படும் அழைப்புக்கு ஈ.பி.டி.பியின் டக்ளஸ் தேவானந்தா சாதகமான சமிக்ஞையைப் பிரதிபலிப்பாகக் காட்டுவார் என்று எதிர்பார்ப்பது அபத்தம்.

அதேநேரத்தில் 'கொழும்பு அரசுக்கு காவடி தூக்கும் சுமந்திரனை வெளியேற்றினால்தான் கூட்டமைப்புடன் சகவாசகம்' என்று அடம்பிடிக்கும் காங்கிரஸ் கஜேந்திரகுமார், சுமந்திரன் இருக்கும் வரை கூட்டமைப்புக்குள் வர போவதில்லை.

அப்படியனால், யாருக்கு - எந்தத் தமிழ்க் கட்சிக்கு - இந்த அழைப்பை சுமந்திரன் விடுக்கின்றார்? அது அவருக்கும், ஆண்டவனுக்கும்தான் வெளிச்சம்...!

-மின்னல் -


டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி

பிளாஸ்ரிக் உற்பத்தி, பிளாஸ்ரிக் திருத்த வேலை, பிளாஸ்ரிக் மீள் சுழற்சி என்பன சிறந்த முறையில் செய்து தரப்படும்.

108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 222 8680
077 592 5088

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## அவசியப்படும் இணக்கம்

நாடு முழுவதிலும் - தேசிய ரீதியில் - உள்ளூராட்சித் தேர்தல்கள் நடந்து முடிந்துள்ளன. பெரும்பாலும் அனைத்து முடிவுகளும் வெளியாகிவிட்டன.

ஒரே சமயத்தில் நாடு முழுவதிலும் இந்தத் தேர்தல் நடைபெற்றதால் அது ஒரு குட்டி - 'மினி' - பொதுத் தேர்தல் போன்றே அமைந்தது.

ஆனால், அதன் தாக்கம் பொதுத் தேர்தலையும் விட கனதியானதாக - அதிர்வு மிக்கதாக - அரசியல் வட்டாரங்களில் உணரப்படுகின்றது.

இந்த 'மினிப் பொதுத் தேர்தல்' முடிவுகள் அடுத்த சில மாதங்களுக்கு இலங்கை அரசியலில் பல்வேறு மாற்றங்களை - நிகழ்வுப் போக்குகளை - உருவாக்கி நிற்கும் என்பது திண்ணம்.

தமிழர்களைப் பொறுத்தவரை - வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை - மக்களின் மனநிலை எத்தகைய கட்டத்தில் இருக்கின்றது என்பதை அரசியல் தலைவர்கள் நாடி பிடித்துப் பார்ப்பதற்கு நல்ல சந்தர்ப்பமாக - உரைகல்லாக - இந்தத் தேர்தல் முடிவுகள் அமைந்திருக்கின்றன.

தென்னிலங்கைச்சிங்களக்கட்சிகள்எனதமிழ்க்கட்சிகளினால் புறம் ஒதுக்கப்பட்ட தரப்புகள் கூட, தமிழ்த் தேசத்தில் காலூன்ற வாய்ப்பளித்திருக்கின்றது இந்த உள்ளாட்சித் தேர்தல்கள்.

ஏற்கனவே நாடாளுமன்றத் தேர்தல்களில் யாழ். மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு குறுகிய காலத்தில் நான்காவது முறையும் எம்.பி. பதவி ஒன்றை வழங்கி நின்ற யாழ்ப்பாணம், இம்முறை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு உள்ளாட்சி மன்றங்களில் முப்பதுக்கும் அதிகமான இடங்களை வழங்கியிருக்கின்றது.

தெற்கில் 'சுனாமி' அலையாக அடித்திருக்கும் மஹிந்தர் எழுச்சி, வடக்கில் தாக்கம் செலுத்த முடியாமல் அடங்கிப் போனமை மட்டுமே இன்றைய நிலையில் இங்கு தமிழர் தரப்புக்கு ஆறுதல் தரக்கூடிய விடயமாகும்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ். தேர்தல் மட்டத்தில் உள்ள ஒரு மாநகரசபை, மூன்று நகரசபைகள், பதின்மூன்று பிரதேச சபைகள் என 17 உள்ளூராட்சி அமைப்புகளிலும் பூநகரி, ஊர்காவற்றுறைப் பிரதேச சபைகள் தவிர்ந்த ஏனைய 15 சபைகளிலும் தொங்கு ஆட்சி நிலைமையே ஏற்பட்டிருக்கின்றது.

பூநகரி பிரதேச சபையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஊர்காவற்றுறை பிரதேச சபையை ஈ.பி.டி.பியும் தனித்துப் பெரும்பான்மையுடன் கைப்பற்றியிருக்கின்றன.

எஞ்சிய சபைகளை எப்படிக் கொண்டு நடத்துவது என்ற கேள்வி எழுந்துள்ளது. எதிரும் புதிருமாக முட்டி மோதி, முரண்டு பிடித்து நிற்கும் தமிழர் தரப்புகள் நிர்வாக நடவடிக்கைகளுக்காக வேனும் இணங்கி வராவிட்டால் இந்தப் பதினைந்து சபைகளினதும் எதிர்காலம் கோவிந்தாதான்.

இணக்க நிலை வராமல் - பிணக்குப் போக்குத் தொடருமானால் - சபைகளின் நிர்வாகத்தை விசேட ஆணையாளர்களிடம் மீளவும் கையளித்து விட்டு, ஆறு மாதத்தில் மீண்டும் தேர்தல் ஒன்றுக்குப் போவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைமையே ஏற்படும்.

இதுவரை காலமும் தமிழர் தரப்புடன் சமரசம் பேசி, அமைதித் தீர்வு காண்பதற்கு வாய்ப்பேச்சிலாவது இணங்கி வந்த தென்னிலங்கைத் தரப்புகள், இந்தத் தேர்தலுடன் அங்கு சுருண்டு போய் விட்டன. பேரினவாத மேலாதிக்க சக்திகள் பேயுருக் கொண்டு விஸ்வரூபம் எடுத்து எழுந்து நிற்கின்றன.

இந்தச் சமயத்தில், தமிழர் தரப்பின் தலைமைகள் - மேய்ப்பர்கள் - தமது மந்தைகளை ஒழுங்குபடுத்தி, கட்டி மேய்ப்பதில் தவறிழைத்து, அவற்றைச் சிதறவிட்டு நிற்கின்றார்கள்.

தென்னிலங்கையில் உருவாகி வரும் அரசியல் களச்சூழல் முன்னெப்போதும் இல்லாதவாறு தமிழர் தரப்புக்கு பெரும் சவாலை ஏற்படுத்தக் கூடியதாக மாறிவருகின்றது.

தமிழர் தரப்பு தனது ஐக்கியத்தை வலுப்படுத்தி, ஒரே குரலாக எழுந்து நின்று தென்னிலங்கையில் உருக்கொண்டு கிளர்ந்து வரும் சக்திகளை எதிர்கொள்ள வேண்டிய சூழல் நெருங்கி வருகின்றது என நினைக்கிறோம்.

தமிழர் தரப்பின் ஐக்கியம், முன்னெப்போதுமே அவசியப்படாத அளவுக்கு முக்கியமானதாகவும், அவசரமானதாகவும், அவசியமானதாகவும் தேவைப்படும் நேரம் வந்திருக்கின்றது.

தமிழர் தரப்புடன் சமரசம் பேணி, இணக்கத் தீர்வு காண்பதற்கான நல்லெண்ணத்தை வெளிப்படுத்திய தரப்புகள் தெற்கில் தோற்கடிக்கப்பட்டு, பேரினவாத - மேலாதிக்க - தரப்புகள், அங்கு வீரியம் கொண்டு வருகையில் -

அதை எதிர்கொண்டு சமாளிப்பதற்கு தமிழர் தரப்பின் ஒருமித்த ஐக்கியம் அவசியமான தேவைப்பாடாக - வரலாற்றுக் கட்டாயமாக - எழுந்துள்ளது.

உள்ளாட்சி சபைகளைத் தனித்து நிர்வகிக்க முடியாத தொங்கு அதிகார நிலைமை வந்துள்ள இச்சூழல், எதிரும் புதிருமான தமிழர் தரப்புகள் உள்ளாட்சி நிர்வாகங்களுக்காகவேனும் ஒரு தளத்தில் - ஒரு மேடையில் - சந்தித்து இணங்கும் கட்டாயத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. அதன் மூலம் தமிழரின் தேசிய இனப் பிரச்சினையை எதிர்கொள்வதற்கான தளத்தில் அவை இணைந்து நிற்பதற்கான களச்சூழலை அது ஏற்படுத்தலாம்.

இதைத்தான் பின்னடைவிலும் ஆசீர்வாதம் (Blessing in disguise) எனக் கூறலாம்.

# அமைச்சர்களுக்கு அவசரமாக அழைப்பு விடுத்தார் ஜனாதிபதி!

கொழும்பு, பெப். 12

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் உள்ள அனைத்து அமைச்சர்கள், பிரதியமைச்சர்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கொழும்பிற்கு அழைத்துள்ளார்.

உள்ளூராட்சிசபைத்தேர்தல் முடிவுகள் வெளியாகி பெரும் அதிர்ச்சியை சுதந்திரக் கட்சிக்கு ஏற்படுத்தியிருக்கின்ற நிலையில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைவதற்கான முயற்சிகளில் அதிருப்தியடைந்த அமைச்சர்கள் சிலர் முயற்சித்து வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்படியான நிலையில் அடுத்தகட்ட நகர்வு, அரசியல் தீர்மானங்களை மேற்கொள்வதற்காக அனைத்து அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தன்னை சந்திக்குமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருக்கின்றார்.

இந்த சந்திப்பிற்கு வராதவர்கள், மஹிந்த ராஜபக்ஷவுடன்



அல்லது ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவதற்கான முயற்சியில் மும்முரமாக களமிறங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (க)

# மஹிந்தவுடன் இணைகிறார் சுசில்?





கொழும்பு, பெப்.12

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மூத்த உறுப்பினரும், தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில் வாய்ப்பு அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து கொள்ளவுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்திப்பதற்கும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த திட்டமிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவருடன் சேர்த்து சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் ஏழு பேரும் மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைவதற்கான பேச்சுக்களை நடத்திவருகின்றனர் என உயர்மட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் முதற்கட்டமாக எதிர்வரும் சில தினங்களில் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்யவுள்ளார் என அறிய முடிகின்றது.

இதுவரை வெளியாகிய தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அணி பல்வேறு பிரதேச சபைகளை கைப்பற்றியிருக்கிறது.

இதன் காரணமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சிக்குள் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதுடன், நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு ஜனாதிபதியை தொடர்பு கொண்ட சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் தங்களது அதிருப்தியைவெளியிட்டனர் என நம்பகரமாகத் தெரியவருகிறது.

# மக்கள் மனங்களை வென்றவர் என்றும் மறையப்போவது கிடையாது !

கொழும்பு, பெப். 12

மக்களின் மனங்களை வென்றவர்கள் என்றும் மறையப்போவது கிடையாது. நல்லாட்சி அரசு எம்மை பழிவாங்கினாலும். நாட்டு மக்கள் கைவிடவில்லையென முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார் .

நல்லாட்சி அரசின் மீது நாட்டு மக்கள் கொண்டுள்ள பற்று தற்போது வெளிப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்ற தேர்தலின் பெறுபேறுகள் தொடர்பில் நேற்று வெளியிட்டுள்ள விசேட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை



வருமாறு:-

கடந்த காலங்களில் நாட்டு மக்கள் பல்வேறு தீர்க்க முடியாத பிரச்சினைகளுக்குள்ளாகி வந்தனர். தொடர்ச்சியான - பொய்யான - வாக்குறுதிகளை நம்பி மக்கள் ஏமாற்றம் கண்டு வந்தனர்.

தமது வாழ்க்கையின் அடிப்படை உரிமைகளையும் பல துயரங்களையும் அனுபவித்த மக்களின் ஆதரவின் பிரதிபலனே இந்த வெற்றி. மக்களின் மனங்களை வென்றவர்கள் என்றும் மறையப்போவது கிடையாது என்ற விடயத்தை நல்லாட்சி அரசாங்கத்திற்கு நாட்டு மக்கள் புரிய வைத்துள்ளனர்.

கிடைக்கப்பெற்ற இந்த வெற்றி பெரும் அபிவிருத்திக்கான ஒரு பாதையை உருவாக்கிக் கொடுத்துள்ளது. இதனைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் நாட்டின் அபிவிருத்தி மற்றும் அரசியலிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்த பொதுமக்கள் தொடர்ந்தும் தமது ஆதரவை வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

## சண்முகநாதன் நினைவுக் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப்.12

முன்னாள் யாழ். அரச அதிபரும் யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவருமான கே.சண்முகநாதனின் நினைவஞ்சலிக் கூட்டம் ஒன்று இன்று மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில், கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவர் சு.டிவகலாலா தலைமையில் இடம்பெறும். (உ)

## நாளை

13.02.2018
செவ்வாய்க்கிழமை
நட்சத்திரம்: உத்தராடம் பி.இ.6.07 வரை
திதி : திரயோதசி மு.இ.11.50 வரை
சுபநேரம்: 11.04 - 12.34 வரை
இராகுகாலம்: 3.34 - 5.04 வரை

# ஈரான் – இலங்கை கூட்டு ஒத்துழைப்பை விரிவுபடுத்தும் உடன்படிக்கையில் கைச்சாத்து



கொழும்பு, பெப். 12
ஈரான் மற்றும் இலங்கைக்கு இடையில் பல்வேறு துறைகளில் அதாவது வர்த்தக மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இலங்கைக்கான இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள தூதுக்குழு இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது.

ஈரானின் எரிசக்தித் துறையின் உயர்அதிகாரி ரசோல் தலைமையிலான குழுவினர் இலங்கை அதிகாரிகளுடன் இத்துறைகள் தொடர்பில் விரிவான பேச்சுக்களை நடத்திய பின்னர் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

அதிகாரிகள் மட்டத்தில் நடந்த பேச்சின்போது இதற்கான திட்டங்களை துரிதமாக விரிவுபடுத்துவது குறித்தும் ஆராயப்பட்டது.

இலங்கைக்கும் ஈரானுக்கும் இடையில் சுகாதாரம் மற்றும் கலாசார துறைகளை பரிமாறிக்கொள்வது தொடர்பிலும் உடன்படிக்கை குறித்து இதன் போது ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில், பிரதி வர்த்தக தொழிற்துறை அமைச்சர் மற்றும் ஏற்றுமதி துறையைச் சேர்ந்த அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## மாகாண சபை தேசிய எல்லை நிர்ணய அறிக்கை தொடர்பில் பேச்சு!

கொழும்பு, பெப். 12
மாகாண சபை தேசிய எல்லை நிர்ணய குழு தயாரித்த அறிக்கை தொடர்பில் பேச்சு நடத்துவதற்காக சர்வகட்சி மாநாடு நடத்தப்படவுள்ளது.

இதற்காககட்சிகளுக்கு அழைப்பு விடுப்பதற்கு மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் பைசல் முஸ்தபா தீர்மானித்துள்ளார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் தலைமையில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

இதற்காக நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சிகள் மற்றும் சிறிய அரசியல் கட்சிகளை பங்கு கொள்ளச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணயத்தை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு அனைத்து தரப்பினரதும் கருத்துக்களை கேட்டறிவதே இதன் நோக்கமாகும் என்று அமைச்சர் தெரிவித்தார்

தேசிய எல்லை நிர்ணய குழுவின் ஆரம்ப பேச்சு எதிர்வரும் புதன்கிழமை நடைபெறும். இதில் மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## இந்திய பிரஜைகள் இருவர் விமான நிலையத்தில் கைது



கொழும்பு, பெப். 12
சட்டவிரோதமான முறையில் 'ஐஸ்' என அழைக்கப்படும் போதைப்பொருள் வகையொன்றை உள்நாட்டிற்கு கொண்டு வந்த இந்திய பிரஜைகள் இருவரை விமான நிலைய சுங்கப் பகுதியினர் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை தங்களின் பயணப்பையில் சுமார் 514 கிராம் போதைப் பொருளை சூட்சுமமாக மறைத்து வைத்து கொண்டு வந்த வேளையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து, விமான நிலைய சுங்கத்தினர் மேற்கொண்ட சோதனையின் போது இருவரும் சிக்கியுள்ளனர்.

இதன் பெறுமதி சுமார் இரண்டு லட்சத்துக்கும் அதிகம் எனத் தெரியவந்துள்ளது.

மலேசியாவில் இருந்து நேற்று முன்தினம் காலை 4.55 மணியளவில் கட்டுநாயக்கா வந்த விமானத்தில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை சுங்கத்தினர் ஆரம்பித்துள்ளனர் என சுங்க ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மாத்தறை - கதிர்காமம் இடையேயான

## புதிய ரயில் திட்டம் 2020இல் நிறைவு!

கொழும்பு, பெப். 12
மாத்தறை – கதிர்காமத்திற்கு இடையிலான புதிய ரயில்வேலைத்திட்டம் 2020 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்படவுள்ளது.

இரண்டு கட்டங்களாக இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மாத்தறையில் இருந்து பெலியத்த வரையில் முதலாம் கட்டப்பணிகளை மேற்கொள்வதற்காக 228 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சு தெரிவித்துள்ளது.

350 குடும்பங்கள் மீள்க்குடியமர்த்தப்பட்டுள்ளன. சுவீகரிக்கப்பட்ட காணிகளின் தொகை சுமார் 87 ஹெக்டேயர்களாகும். இதற்கு இழப்பீடாக 993 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இது நாட்டின் பொருளாதாரம் மற்றும் சுற்றுலாத்துறைக்கு பெரிய பின்புலமாக அமையும் என்று போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவையின் பிரதியமைச்சர் அசோக அபேசிங்க தெரிவித்தார்.

## பொலன்னறுவை கைவினைப்பொருள்கள் விற்பனை நிலையத்திற்கு ஜனாதிபதி விஜயம்!



கொழும்பு, பெப். 12
பொலன்னறுவை, எத்துமல்பிட்டிய வீதியில் அமைந்துள்ள நிஷாந்த கைவினைப் பொருள் விற்பனை நிலையத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பார்வையிட்டார்.

பாரம்பரியமாக பெற்றுக்கொண்ட கைவினைத்திறனுடன் புத்தாக்கத்தையும் நவீன தொழில்நுட்பத்தையும் இணைத்து சிற்பக்கலையில் இந்த கைவினைப் பொருள் விற்பனை நிலையத்தை நேற்றுமுன்தினம் ஜனாதிபதி சென்று பார்வையிட்டார்.

அதன் உரிமையாளர் உள்ளிட்ட ஊழியர்களுடன் சுமுக கலந்துரையாடலில் ஈடுபட்டவாறு சிறிது நேரம் அங்கு தங்கியிருந்த ஜனாதிபதி, விற்பனை நிலையத்தையும் பார்வையிட்டார்.

பண்டைய கலாசாரத்தை வெளிக்காட்டும் வகையில் செதுக்கப்பட்ட கைவினைப் பொருள்கள் இந்த விற்பனை நிலையத்தில் காணப்படுகின்றமையால், பெருமளவிலான உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகைதருகின்றனர். அவ்வாறு வருகை தந்திருந்த சுற்றுலாப் பயணிகளுடனும் ஜனாதிபதி கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இதனிடையே பொலன்னறுவை நகரத்தில் அமைந்துள்ள விவசாயத் திணைக்களத்தின் 'ஹெல பொஜுன்' பாரம்பரிய உணவகத்திற்கும் நேற்றுமுன்தினம் முற்பகல் ஜனாதிபதி விஜயம் செய்து, அதன் செயற்பாடுகளை மேற்பார்வை செய்ததுடன் அங்கு வருகை தந்திருந்த மக்களுடனும் கலந்துரையாடினார். (கு)


## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் – 18, மின்சார நிலைய வீதி, ஆதன இலக்கம் 21, 23 என்ற இலக்கங்களை யுடைய ஆதனங்கள் யாழ் மாநகரசபையின் ஆதன வரிப் பதிவேட்டில் இராஜரட்ணம் பெண் யோகாம்பிகையின் உரிமையாளர் எனப் பதியப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை மேற்கு இராசரத்தினம் திருச்செந்தூரும் பெண் ஜெயலட்சுமியும் 1982.07.30 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு கந்தசாமி கணேசானந்தன் முகதாவில் 416 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நன்கொடை உறுதியில், குறித்த ஆதனத்தில் சொரியலாக 1/2 பங்கு 1905.07.11 திகதியிட்டுப் பிரசித்த நொத்தாரிசு ஆ.சிதம்பர நாதப்பிள்ளை முகதாவில் 4027 ஆம் இலக்கத்தில் அத்தாட் சிப்படுத்தப்பட்ட நன்கொடை உறுதி மூலம் தங்களில் முதலாம் பெயரில் தாயார் காலஞ்சென்ற லோகம்மாவின் சொந்தமும் ஆட்சியுமானதென்றும் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றில் நடைபெற்ற 7370 ஆம் இலக்க உரிமைத் தத்துவ வழக்கின்படி தங்களில் முதலாம் பெயரின் முதுசமும் சொந்தமும் ஆட்சியுமானதும் என வெளிப்படுத்தி, திருச்செந்தூர் மகள் கமலாம்பாளுக்கு நன்கொடை யாக வழங்கியுள்ளார். மேற் குறித்த ஆதனத்தின் மிகுதி சொரியலான அரைப்பங்கினை குறித்த இராசரத்தினம் திருச்செந்தூரும் பெண் ஜெயலட்சுமியும் 30.07.1982 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு க.கணேசானந்தன் முகதாவில் 417 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்திய நன்கொடை உறுதி மூலம் மேற்குறித்த அதே உரித்து வரலாற்றைக் குறிப்பிட்டு திருச்செந்தூர் மகள் இராஜினிக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். வட்டுக்கோட்டை மேற்கு திருச்செந்தூர் மகள் கமலாம்பாள், திருச்செந்தூர் மகள் இராஜினி இருவரும் 1983.05.16 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு க.கணேசானந்தன் முகதாவில் முறையே 488,489 ஆம் இலக்க அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறுதி உறுதி மூலமாக இராமசாமி குமாரசிங்கத்திற்கு அறுதியாக விற்றுள்ளனர்.

**ஆதன விவரம்:-** வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம் வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணைக் கிழக்கு இறை "அணிச்சிலடியும் பாதிரி திடலும் நில. பர.0 குளி 03.46 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.பரமேஸ்வரன் அவர்களால் 2461/2016 ஆம் இலக் கத்தில் அளந்து வரையப்பட்ட படத்தில்துண்டு–1, துண்டு–2 எனச்சுட்டப்பட்டுள்ளது.

வடக்கு:- பாதை(உறுதிப்படி இராமநாதனின் ஆதனம்)
கிழக்கு:- ஜெயரட்ணசிங்கம் கமலாம்பாளின் உரிமைக் காரரின் ஆதனம்
தெற்கு:- வடிகாலும் மின்சார நிலைய வீதியும்
மேற்கு:- ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை

தற்போது இராமசாமி குமாரசிங்கம் இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது இராமசாமி குமாரசிங்கம் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆணையாளர்,
மாநகர சபை
யாழ்ப்பாணம்.**

# காரைதீவு பிரதேச சபையில் கூட்டாட்சி?

(காரைதீவு நிருபர் சகா)

காரைதீவு பிரதேசசபைக்காக நடைபெற்ற 3ஆவது உள்ளூராட்சிசபைத் தேர்தலில் எந்தவொரு கட்சியும் அறுதிப்பெரும்பான்மையை பெறாத காரணத்தினால் கூட்டாட்சி அமைக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற தேர்தலில் இலங்கைத்தமிழரசுக்கட்சி 3ஆயிரத்து 802 வாக்குகளையும் சுயேச்சை-1 அணி ஆயிரத்து 985 வாக்குகளையும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆயிரத்து 684 வாக்குகளையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆயிரத்து 522 வாக்குகளையும் சுயேச்சை -2 அணி 829 வாக்குகளையும் தமிழர் விடுதலைக்கூட்டணி 280 வாக்குகளையும் ஐ.தே.கட்சி 203 வாக்குகளையும் பெற்றுக்கொண்டன.

அதன்படி த.அ.கட்சி 4ஆசனங்களையும் சுயேச்சைக்குழு-1 அணி இரு ஆசனங்களையும் ஸ்ரீல.மு.கா. 1 ஆசனத்தையும் ஸ்ரீல.சு.கட்சி 2ஆசனங்களையும் அ.இ.ம.காங்கிரஸ் 1ஆசனத்தையும் சுயேச்சை 2 அணி 1ஆசனத்தையும் பெற்றுக்கொண்டன.

சிலவேளை, ஸ்ரீல.மு.கா கட்சிக்கு மேலுமொரு ஆசனம் கிடைக்குமா? என்பதை தேர்தல் ஆணையாளர் தீர்மானிப்பார் என அம்பாறை தேர்தல் அலுவலகம் கூறுகிறது. அப்படி 1ஆசனம் கூடினால் காரைதீவுப்பிரதேச சபைக்கான மொத்த ஆசனங்கள் 12 ஆக மாறும்.

வட்டாரமுறையில் த.அ.கட்சி சார்பில் ச.நேசராசா, த.மோகனதாஸ், சி.ஜெயராணி, கி.ஜெயசிறில், அ.இ. ம.காங்கிரஸ் சார்பாக முஸ்தபா ஜலீல் ஸ்ரீல.சு. கட்சி சார்பில் ஏ.எம்.யாகீர் சுயேச்சை-2 அணி சார்பில் ஏ.ஆர்.எம். பஸ்மிர் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

விகிதாசாரமுறையில் தெரிவு செய்யப்படுபவர்களின் பெயர்கள் அந்தந்த கட்சியினால்தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டபின்னரேவெளியாகும்.

11ஆசனங்களைக்கொண்ட காரைதீவுப்பிரதேசசபைக்காக 6 கட்சிகளும் 2 சுயேச்சைக்குழுக்களும்போட்டியிட்டன.

மொத்த 12ஆயிரத்து 972வாக்குகளில் 10ஆயிரத்து 821வாக்குகள் அளிக்கப்பட்டன. அதில் 106 வாக்குகள் நிராகரிக்கப்பட்டதனால் 10ஆயிரத்து 715வாக்குகள்செல்லுபடியானவை. அதனால் வெட்டுப்புள்ளி 983.72 அதாவது 984 ஆகும்.

அதனால் எந்தவொரு கட்சியும் அறுதிப்பெரும்பான்மையைப் பெறாத காரணத்தினால் கூட்டாட்சி அமைக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

## சிறுமியை அழைத்துச் சென்ற இளைஞருக்கு விளக்கமறியல்

திருகோணமலை,பெப்.12

திருகோணமலை கோமரன்கடவெலப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பதினைந்து வயதுடைய சிறுமியொருவரை அழைத்துச்சென்ற இளைஞரை இம்மாதம் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் திருமதி சமிலா குமாரி ரத்நாயக்க உத்தரவிட்டார்.

திரிகல்யாணபுர, கோமரன்கடவெல பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் பதினைந்து வயதுடைய சிறுமியைக் காதலித்து வந்த நிலையிலே பெற்றோர்களுக்குத் தெரியாமல் அழைத்துச் சென்ற போதே சிறுமியின் பெற்றோர்கள் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கமைய சந்தேக நபரை கைது செய்துள்ளோம் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபரை பொலிஸார் திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கோமரங்கடவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வேட்பாளர் மீது தாக்குதல்

ஏறாவூர் நகர சபைக்காக ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் ஒருவர், வாக்களிப்புத் தினமான நேற்று முன்தினம் அதிகாலை தாக்கப்பட்டுள்ளாரென, ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏறாவூர், ஓட்டுப்பள்ளி வட்டார வேட்பாளர் எம்.பி.எம். இர்சாத் ஹனி என்பவரே தாக்கப்பட்ட நிலையில், ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தேர்தல் வன்முறையாகப் பதிவாகியுள்ள இச் சம்பவம் பற்றி, பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

## மட்டக்களப்பில் வியாழேந்திரன் எம்.பி. தலைமையில் களமிறங்கியவர்கள் வெற்றி



மட்டக்களப்பு,பெப்.12

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் தலைமையிலான புளொட் ஊடாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பல வட்டாரங்களை வென்றுள்ளது.

அந்த வகையில் மண்முனைப் பற்று பிரதேசசபைக்கு களமிறங்கிய நால்வரில் மூன்று பேர் வெற்றி பெற்றுள்ளனர். அத்துடன், மட்டக்களப்பு மாநகரசபையில் களமிறங்கிய மூன்று பேரும் வெற்றி பெற்றுள்ளனர்.

மண்முனை தென் எருவில் பற்று மற்றும் மண்முனை தென் எருவில் பற்று ஆகிய பிரதேச சபையின் வேட்பாளர்களும் வெற்றி பெற்றுள்ளனர்.

இதேபோன்று ஏறாவூர்பற்றுக்கு 06 பேர் நியமிக்கப்பட்ட நிலையில் இருவர் வெற்றி பெற்றுள்ளதுடன், வவுணதீவில் 03 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்ட நிலையில் இருவர் வெற்றிபெற்றுள்ளமையுடன், வாகரையில் இருவர் நியமிக்கப்பட்ட நிலையில் ஒருவர் வெற்றிபெற்றுள்ளார் என்பது குறிப் பிடத்தக்கது.

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 16 நாச்சிமார் கோயில் வீதி ஆதன இல 154/57 என்ற ஆதனம் தம்பி ஐயா பெண் சின்னம்மா கந்தன் வள்ளி பெரியானும் குழந்தையும் என்னும் பெயரில் யாழ் மாநகரசபையின் பதிவேட்டில் காணப்படுகிறது.

இல 54/16, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம் என்னும் முகவரியைச் சேர்ந்த நவரத்தினம் கைம்பெண் சந்திரா என்பவர் குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாசிசு சோமசுந்தரம் தேவராஜா முகதாவில் 2013.01.07 ஆம் திகதியிட்டு 6282 ஆம் இலக்கத்தில்அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரகடனப் படுத்தல் சாதன உறுதியில் 2002.09.19 திகதி 2045 ஆம் இலக்கத்தில் பிரசித்த நொத்தாரிசு பா.தவபாலன் முகதாவில் அத்தாட்சிப்படுத்திய அறுதி உறுதிமூலம் தனது கொள்விலையானதென்றும், குறித்த 2045 ஆம் இலக்க உறுதியாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் பதியப்படவில்லை என்றும், குறித்த உறுதியின் இணைப்பிரதியை காணிப்பதிவகத்தில் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்றும் வெளிப்படுத்தியுள்ளார். பிரசித்த நொத்தாரிசு சோமசுந்தரம் தேவராஜா முகதாவில் 2017.03.12 ஆம் திகதியிட்டு 7712 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட நன்கொடை உறுதி மூலம் மேற்படி விலாசத்தைச் சேர்ந்த நவரத்தினம் கைம்பெண் சந்திரா தனது பெறாமகளாகிய இல 66/12, 3ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் மகள் பேரின்பச்செல்வி என வழங்கும் நடராசா கைம்பெண் பேரின்பச்செல்விக்கு நன்னொடையாக வழங்கியுள்ளார்.

**ஆதன விவரம்:-** வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வண்ணார் பண்ணை கோவிற்பற்று, வண்ணார் பண்ணை வடகிழக்கு இறை, 'நரியன்குன்று' இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் A.கந்தசாமி அவர்களால் 2017.06.17 திகதி 4522 இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தில் துண்டு - 1 எனச் சுட்டப்பட்ட நில. பர.00 குளி 13.50 ஆகும். இதற்கு எல்லை

கிழக்கு :- கை ஒழுங்கை
வடக்கு :- கதிரவேலு பரமானந்தம் பெண் சற்குணத்தின் ஆதனம்.
மேற்கு :- மிகுதி ஆதனம்
தெற்கு :- இராமசாமி சுந்தரலிங்கம் பெண் பத்மாவதியின் ஆதனம்

தற்போது நடராசா கைம்பெண் பேரின்பச்செல்வி இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத் தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது நடராசா கைம்பெண் பேரின்பச்செல்வி என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப் பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஆணையாளர்,**
**மாநகரசபை**
**யாழ்ப்பாணம்.**

## இளம் விஞ்ஞானி வினோஜ்குமாருக்கு விமான நிலையத்தில் கௌரவ வரவேற்பு

(காரைதீவு நிருபர் சகா)

தாய்லாந்தில் நடைபெற்ற அறிவியல் புலமை தொழில் நுட்பக்கண்காட்சியில் இலங்கைத்தமிழ் மாணவன் சோமசுந்தரம் வினோஜ்குமார் இரு பதக்கங்களைப்பெற்று நேற்று நாடு திரும்பியுள்ள நிலையில் விமான நிலையத்தில் கௌரவவரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

2018 இற்கான அறிவியல் புலமை தொழில் நுட்ப கண்காட்சி தாய்லாந்து மாநாட்டு மண்டபத்தில் 2018.01.01 தொடக்கம் 2018.02.6 வரை நடைபெற்ற சர்வதேச அறிவியல் புலமை மற்றும் கண்டுபிடிப்பு போட்டியில் 97 நாடுகளைச் சேர்ந்த ஆயிரத்து 800 பல்கலைக்கழகக் கண்டுபிடிப்பாளர்கள் போட்டியிட்டனர்.

அப்போட்டியில் இலங்கை சம்மாந்துறையைச்சேர்ந்த இளம் தமிழ் விஞ்ஞானி சோமசுந்தரம் வினோஜ்குமார் போட்டியிட்டு சர்வதேச வெண்கல விருதையும் உலக கண்டுபிடிப்பாளர் மற்றும் முயற்சியாளர் ஸ்தாபனத்தினால் சர்வதேச ஆக்கபூர்வமான கண்டுபிடிப்புக்கான சிறப்பு விருதையும் பெற்றுக் கொண்டார். இப்போட்டியில் 4 மலேசிய தமிழர்களுடன் சேர்த்து ஓர் ஈழத் தமிழனாக போட்டி இட்டு வெற்றி அடைந்து உள்ளார். அவருக்குகட்டுநாயக்க விமான நிலையத்தில் கௌரவ வரவேற்பு



அளிக்கப்பட்டது.

இவ் விருது 'கணித உதவியாளன்' எனும் கணித பாடத்தை இலகுவாக கற்க உதவும் கண்டுபிடிப்புக்கே வழங்கப்பட்டது.

தனது ஆரம்பக் கல்வியை சம்மாந்துறை ஸ்ரீ கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயத்திலும் உயர்தரத்தைச் சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்திலும் கற்றார்.

தற்போது யாழ்.பல்கலைக்கழகத்தில் கற்றுக் கொண்டிருக்கும் இவர் இதுவரை 81 கண்டுபிடிப்புக்களைச் செய்துள்ளதோடு 31 தேசிய விருதுகளையும் 3 சர்வதேச விருதுகளையும் பெற்றுக்கொண்டுள்ளார்.

# அமைதியை பாதுகாக்க தொடர்ந்தும் நடவடிக்கை!

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு



கொழும்பு, பெப். 12

கூட்டங்கள் பேரணிகள் நடத்தப் படுதல் ஆகியவற்றிற்கு மறு அறிவித்தல் வரையில் தடைவிதிக்கப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

இந்த உத்தரவுகளை மீறுவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

2018 உள்ளூராட்சி மன்ற தேர்தலையடுத்து நேற்றைய தினத்திலும் நடமாடும் பாதுகாப்பு சேவை, கலகங்களை அடக்குவதற்கான குழுக்கள், வீதித்தடைப் பாதுகாப்பு முன்னெடுக்கப்படும். உள்ளூராட்சிமன்ற தேர்தல் அமைதியான முறையில் நடைபெற்றுள்ளது.

இதன் வெற்றியை அமைதி யான முறையில் மக்கள் மேற் கொள்ளவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சிவராத்திரியன்று பட்டிமன்றம்

வவுனியா, பெப்.12

மகா சிவராத்திரியை முன்னிட்டு நாளை செவ்வாய்க்கிழமை வவுனியா, தோணிக்கல் சிவன் ஆலயத்தில் பட்டிமன்ற நிகழ்வு நடைபெறவுள்ளது.

"ஆன்மீக சிந்தனை இன்றைய சமூகத்தில் வளர்கின்றதா, தளர்கின்றதா?" என்ற தலைப்பில் நடைபெறும் பட்டிமன்றத்தின் நடுவராக மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் எஸ். சீனிவாசன் பங்கேற்பார். (இ

* * *

ஒட்டுசுட்டான், பெப்.12

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை சிறப்புப் பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது.

"ஆன்மீக சிந்தனைகளை ஆண்களிடம் வளர்ப்பது தாயா, தாரமா?" என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெறும். (இ

# தரமான மிளகாயை மாத்திரம் ஏற்றுமதி செய்ய தீர்மானம்!

கொழும்பு, பெப். 12

எதிர்காலத்தில் தரத்தில் சிறந்த மிளகாயை மாத்திரம் ஏற்றுமதி செய்யவுள்ளோம் என கைத்தொழில் மற்றும் வணிக அலுவல்கள் அமைச்சர் றிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

சர்வதேச அரங்கில் இலங்கையின் உற்பத்திகளுக்கு இருக்கும் நன்மதிப்பை தொடர்ந்து பேணுவது அரசின் நோக்கமாகும்.

2016ஆம் ஆண்டு மிளகாய் ஏற்றுமதியின் மூலம் ஆயிரத்து 80 கோடி ரூபாவிற்கு மேலான வருமானம் கிடைத்தது என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.




# கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட மூன்று இந்திய மீனவர்கள் விடுவிப்பு!





கொழும்பு, பெப். 12

இலங்கை கடற்பகுதியில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டதற்காக கடந்த 16 ஆம் திகதி கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 16 இந்தியர்களுள் 3 இந்தியர்கள் மீண்டும் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

கடற்படையினரின் ஒத்துழைப்புடன் இவர்கள் நேற்றுமுன்தினம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்திய மீனவர்களை ஒப்படைக்கும் நிகழ்வு இலங்கை கரையோர பாதுகாப்புப் பிரிவினரினால் நேற்றுமுன்தினம் காங்கேசன்துறை வடக்கில் சர்வதேசகடற்பரப்பில் இடம்பெற்றது.

# வெலிகமவில் பழக்கிராமம்; ஸ்தாபிக்கும் திட்டம்!

நாட்டின் பல பாகங்களிலும் 15 ஆயிரம் பழக்கிராமங்களை ஸ்தாபிக்கும் திட்டம் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் மாத்தறை மாவட்டத்தின் வெலிகம பிரதேசத்தில் 3 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தக் கிராமங்களில் முதற்கட்டமாக சீதா, தோடை முதலான தாவரங்கள் பயிரிடப்படவுள்ளன. கிராமவாசிகள் மத்தியில் தாவரக் கன்றுகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# மாதகல் தூயலூர்த்து திருவிழா

மாதகல் தூயலூர்த்து அன்னைத்திருத்தல திருவிழா எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

8 ஆம் திகதி வியாழன்மாலை4.30மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் தினமும் மாலை 4.45 மணிக்கு திருச்செபமாலையுடன் தொடர்ந்து வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு தூயலூர்த்து அன்னையின் திருச்சொரூபதேர்ப்பவனியும், நற்கருணை வழிபாடும் மறுநாள்சனிக்கிழமை காலை 7 மணிக்கு திருவிழா திருப்பலியும் யாழ். மறைமாவட்ட ஆயர்தலைமையில் இடம்பெறும்.

# நவீன தொழில்நுட்ப அலங்கார கட்டமைப்பு!



கொழும்பு, பெப். 12

உயர்தரத்திலான மற்றும் நவீன தொழில்நுட்பத்தைக் கொண்ட அலங்கார கட்டமைப்பொன்று இலங்கையில் வடிவமைப்பதற்கான வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

வெற்றிகரமான தொழில் துறையினர் மற்றும் சிறந்த அலங்கார கலாசார துறையினரை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

இதற்காக இந்தத் துறை சார்ந்த பிரச்சினைகளை அடையாளம் காண்பதற்காக நாடு தழுவிய ரீதியில் ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

பிரதமர் அலுவலகத்தின் கொள்கை திட்ட அலுவலகம் மூலம் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் – 17, நாவலர் வீதி, ஆதன இலக்கம் 158/5, 158/7 என்ற இலக்கங்களையுடைய ஆதனங்கள் யாழ் மாநகர சபையின் ஆதனவரிப் பதிவேட்டில் குமாரசாமி ஆரியராசா எனப் பதியப்பட்டுள்ளது.

3 Stather Crescent Markham, ontatio. Canada என்னும் முகவரியைச் சேர்ந்த கைலாசபிள்ளை சிவானந்தனும் பெண் ரமணியும் ,37, Errol Garders New Malden, Surrey KT3 6QE United Kingdom என்னும் முகவரியைச்சேர்ந்த குமாரசாமி ஆரியராசாவும் 2016.01.21 ஆம் திகதியிட்டு பிரசித்த நொந்தாரிசு இரட்ணம் இரகுராஜா முகதாவில் 7822 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறுதி உறுதியில் தங்களின் 1 ஆம், 2 ஆம் பேர் "உவையடியும் சந்தனத்தான் தோட்டம்" என்னும் பெயருடைய ஆதனத்தில் நில.பர.01 இனை அறுதி வாங்கியதாகவும் 1984.09.02 ஆம் திகதியிட்டு பிரசித்த நொந்தாரிசு சி.சி. சோமசுந்தரம் முகதாவில் 9129 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறுதி உறுதி மூலம் 3 ஆம் பேர் அறுதி வாங்கியதாகவும் அதே ஆதனத்தில் நில.பர.02 குளி 05 இனை யாழ் மாவட்ட நீதிமன்ற பிரிவிடுதல் வழக்கு இலக்கம் 18499/p மற்றும் தத்துவ வழக்கு இலக்கம் 3595/7 ஆகியவற்றில் வழங்கப்பட்ட தீர்ப்பின் மூலமாக பெற்றதாகவும் வெளிப்படுத்தி இவ்வாதனத்தை 4 துண்டுகளாக பிரிவிட்டு உத்தரவு பெற்ற நில அளவையாளர் மு.கனகசபை அவர்களால் 2011.02.24ஆம் திகதியிட்டு 4795/11 இலக்கத்தில் வரையப்பட்ட படத்தில் நில.பர. 4குளி 00.64 என விஸ்தீரணம் குறிப்பிட்டு இல.154, நாவலர் வீதியைச் சேர்ந்த கந்தையா கனகசபாபதி மாலவனிற்கு அறுதியாக விற்றுள்ளார்.

**ஆதன விபரம்** :– வடமாகாணம்,யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை "உவையடியும் சந்தனத்தான் தோட்டமும்" நில.பர.04 குளி 0.64 இது மேற்குறித்த 4795/11 ஆம் இலக்க நில அளவைப் படத்தில் துண்டு 1 தொடக்கம் துண்டு 4 வரையான 4 துண்டுகளாக சுட்டப்பட்டுள்ளன.

கிழக்கு:– ஒழுங்கை

வடக்கு:– இரட்ணசபாபதிக்கும் தியாகராஜாவிற்கும் உரிய ஆதனங்கள்

மேற்கு:– இரட்ணசபாபதிக்கும் சண்முகசுந்தரத்திற்கும் உரிய ஆதனங்கள்

தெற்கு:– தம்பித்துரை சந்திரசேகரத்திற்குரிய ஆதனம்

தற்போது கனகசபாபதி மாலவன் இவ்வாதனத்தை தமது பெயருக்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத் தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது கனகசபாபதி மாலவன் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆணையாளர்**
**மாநகரசபை**
**யாழ்ப்பாணம்.**



# யாழ். சாயி நிலையத்தில் சிவராத்திரி நிகழ்ச்சி



யாழ். இராமநாதன் வீதி பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை செவ்வாய்க் கிழமை மாலை 6 மணிக்கு அபி ஷேகத்துடன் சிவராத்திரி நிகழ்ச்சி கள் ஆரம்பமாகும்.

தொடர்ந்து இரவிரவாக பஜனை, சிவ பக்தி கீதங்கள் இடையிடையே ஓ நமச்சிவாய மந்திர ஜெபத்துடன் சிவ லிங்கத்திற்கு வில்வார்ச்சனைகள் இடம்பெறும். அனைவ ரையும் அழைக்கின்றனர் சாயி சேவா நிலையத்தினர் (இ)

## தினசரி ராசி பலன் (12.02.2018)

2018ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் தைத் திங்கள்30ஆம் நாள் திங்கட்கிழமை துவாதசித்திதி இரவு 8.05 மணி வரை பின்னர் திரயோதசி. நட்சத்திரம்: பூராடம் பி.இ. 2.03 மணி வரை பின்னர் உத்தராடம். மரணயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - காலை 8 மணி முதல் 9.27 மணி வரை

**சுபநேரம்** - பகல் 12.30 மணி முதல் 2 மணி வரை

**திவசம் செய்ய வேண்டிய திதி**- தை மாத தேய்பிறை துவாதசி.

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** பூராடம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** நன்மையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக் கும். நினைத்த காரியம் கைகூடும். குடும்பத்தில் புரிந்துணர்வு அதிகரிக்கும். புத்திரர்களின் உதவிகள் கிடைக்கும்.

**ரிஷபம்** யோசனையான நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் வீண் சச்சரவுகள் உண்டா கும். உத்தியோகத்தர்களுக்கு உயர்வுகள் மந்தமான செயல்பாடுகளால் காலதாமதம் ஆகும்.

**மிதுனம்** விருத்தியான நாள். பொருளாதாரம் விருத்தி அடை யும். குடும்ப உறவில் அன்பும், பண்பும் நிறைந்திருக் கும். வியாபாரத்தில் கணிசமான லாபம் கிடைக்கும். பெண்களின் செயல்பாடுகள் வேகம் அதிகரிக்கும்.

**கடகம்** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்ப உறவு பலப்படும். செய்யும் தொழில் மேன்மை உண்டாகும். மாணவர்கள் ஆசிரியர்களின் யோசனையால் கல்வி வளர்ச்சி அடைவார்கள்.

**சிம்மம்** இனிமையான நாள். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். குடும்பத்தில் இனிய நல்லுறவு நிலவும். சகோதர வழியால் எதிர்பாராத உதவிகள் கிடைக் கும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை.

**கன்னி** அலைச்சல் மிகுந்த நாள். பணம் தட்டுப்பாடாக இருக்கும். கடன் வாங்க அலைவார்கள். சிலர் கொடுத்த பணத்தை மீளப்பெறுவதற்கு அலைந்து திரிவார்கள்.

**துலாம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருள்வரவு மத்திமமாக இருக்கும். செலவுகள் அளவுக்கதிகமா கும். தொழிலில் எதிர்பார்த்த பலன்கள் குறையும். சகோதர உறவு பலப்படும்.

**விருச்சிகம்** இன்பமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத் தொழில் சுறுசுறுப்பாக இயங்கும். மாணவர்கள் செல்வாக்கும், சொல்வாக்கும் பெற்றுத்திகழ்வார்கள்.

**தனுசு** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். குதிய தொழில் செய்து லாபம் ஈட்டுவார்கள். உத்தி யோகத்தில் திறமையான நிர்வாகத்தால் தொழில் வளர்ச்சியைப் பெறுவார்கள்.

**மகரம்** கவலையான நாள். பணம் பற்றாக்குறையாக இருக் கும். குடும்பத்தில் வீண் பிரச்சினைகள் தலை தூக் கும். எண்ணிய காரியங்கள் நிறைவேறாமல் போகும்.

**கும்பம்** உயர்வான நாள். பணப்புழக்கம் தேவைகளை நிறைவு செய்யும். வேலை தேடுவோருக்கு அரசாங்க உத்தியோகம் கிடைக்கும். சிலருக்கு வெளிநாட்டுப் பயணம் திட்டமிட்டபடி அனுகூலமாகும்.

**மீனம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சமநிலையில் இருக்கும். வியாபாரத்தில் விற்பனை மந்தமாக இருக்கும். யாரிடமும் பகை கொள்ளாமல் அனுசரித்துப் போதல் நல்லது.

சந்திராட்டமநாள்:காரத்திகை 2ஆம், 3ஆம், 4ஆம் பாதங்கள் ரோகிணி, மிருகசீரிடம் 1ஆம், 2ஆம் பாதங்களில் பிறந்தோர் நற்கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

# மன்னாரில் தனியாருக்குச் சொந்தமான காணியில் தீ!

மன்னார் கீரி கிராமத்தில் உள்ள தனியாருக்குச் சொந்த மான காணி ஒன்றில் நேற்று முன்தினம் மாலை திடீர் என ஏற்பட்ட தீ பரவல் காரண மாக இந்தக் காணியில் காணப் பட்ட மரங்கள் தீயில் எரிந்து சாம்பலாகியுள்ளன என அந் தப் பிரதேச மக்கள் தெரிவித் துள்ளனர்.

மன்னார் கீரி கிராமத்திற்கு அருகில் உள்ள கர்த்தர் கோவில் பகுதியில் உள்ள தனியாருக்குச் சொந்தமான சுமார் 2 ஏக்கர் காணியில் நேற்று முன்தினம் மாலை திடீர் எனத் தீப் பரவல் ஏற்பட் டது.

இதன்போது இந்தக் காணியில் காணப்பட்ட தென்னை, பனை மரங்கள் தீயில் பற்றி எரிந்துள்ளன.

இந்தத் தீயைக் கட்டுப்ப டுத்த மக்கள் முயற்சிகளை மேற்கொண்ட போதும் கட் டுப் படுத்த முடியாத நிலை ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர் பாக பிரதேச மக்கள் மன்னார் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கியும் மன்னார் பொலிஸார் உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்து தீயைக் கட்டுப்படுத்த முயற் சிகளை மேற்கொள்ள வில்லை.

இந்த நிலையில் இந்த இரண்டு ஏக்கர் காணியில் தீ முழுமையாகப் பரவி அந் தக் காணியில் காணப் பட்ட தென்னை, பனை மரங்கள் தீயில் எரிந்து சாம் பராகியுள்ளன என பிரதேச மக்கள் கவலை தெரிவித் தனர். (க)

# பௌஸியின் பேத்தி மீது முன்னாள் கணவர் தாக்குதல்!

கொழும்பு, பெப். 12

நீதிமன்ற வளாகத்தினுள் தான் தாக்கப்பட்டேன் என அர சவை அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸியின் பேத்தியும் சட்டத் தரணியுமான பாத்திமா ஹப்ஸா நீதிமன்ற பொலி ஸிலும் பெண்கள் மற்றும் குழந்தைகள் பிரிவிலும் குற்றங்களால் பாதிக்கப்பட் டவர்கள் மற்றும் சாட்சிகளுக் குப் பாதுகாப்பு வழங்கும் தேசிய அதிகார சபையிலும் முறைப்பாடு பதிவுசெய்துள் ளார்.

இந்தத் தாக்குதலை, பிணையில் வெளிவந்திருக் கும் தனது முன்னாள் கண வரும் வைத்தியருமான ஈஸ்லி மௌஜூத்தே நடத்தினார் என அவர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது வயிற்றில் குத் தினார் என்றும் கொலை செய்துவிடுவேன் என்றும் மிரட்டினார் எனவும் ஹப்ஸா தெரிவித்துள்ளார்.

தாக்குதல் இடம்பெற்ற சிறிது நேரத்தில் ஹப்ஸா தேசிய வைத்தியசாலையில் மருத் துவ பரிசோதனைகளுக்காக அனுமதிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# சிவராத்திரி விழா

யாழ்.பெப்.18

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களம் நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தின் அனுசர ணையுடன் நடத் தும் மகா சிவராத்திரி விழா நாளை செவ் வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு மேற்படி ஆலயத்தில் திணைக் கள அபிவிருத்தி உத்தி யோகத்தர் ம.செந்தூ ரன்தலைமையில் இடம் பெறும்.

விழாவில் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஹரீஸ்வர சர்மா ஆசியுரைவழங்கு வார். சிறப்பு விருந்தின ராக திணைக்கள அபி விருத்தி உத்தியோகத் தர் மா.ஆனந்தலக்ஷ்மி கலந்து கொள்வார். கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (இ)

# மகா சிவராத்திரி வழிபாடு

வடமராட்சி, பெப்.12

பருத்தித்துறை கற்கோவ லம் எல்லை ஒழுங்கை பக வான் சிறி சத்திய சாயி சேவா நிலையத்தின் சாயி சுரபியில் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிமுதல் மகா சிவராத்திரி வழிபாடுகள் இடம் பெறும்.

அன்றைய தினம் இரவு முழு வதும் அபிஷேகம், பஜனை, கணபதி ஹோமம், ஸ்ரீருத்ர ஹோமம், திருப்பள்ளி எழுச்சி ஆகிய நிகழ்வுகளும் இடம் பெறும். (இ)

# ஆலய மகோற்சவம்

துன்னாலை அருள்மிகு கோவிற்கடவைப் பிள் ளையார் கோவில் வருடாந்த பெருந்திருவிழா கடந்த 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம் பமாகி நடைபெற்று வருகின்றது. நாளை மறுதினம் புதன் கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறும். பெருந்திருவிழாவை கோவில் குருக்கள் பிரம்ம ஸ்ரீ பூரண சுதாகரக்குருக்கள் பிரதம குருவாக திரு விழாவை நடத்தி வருகின்றார்.

★ ★ ★ ★ ★

பருத்தித்துறை கொட்டடி திருவருள் ஸ்ரீ சித்தி விநா யகர் கோவில் வருடாந்த பெருந்திரு விழா கடந்த 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. நாளை செவ் வாய்க்கிழமை சிவராத்திரி தினத்தன்று வேட்டைத் திருவிழாவும் புதன் கிழமை தேர்த் திருவிழாவும் வியா ழக்கிழமை தீர்த்தத்திருவிழாவுடன் பெரும் திருவிழா நிறைவு பெறும். (இ)

★ ★ ★ ★ ★

மட்டுவில் தெற்கு வேரற்கேணி கந்தசுவாமி கோயில் சதுர்த்தி தின இலட்சலார்ச்சனை பெருவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரம்பமாகி நாளை செவ்வாய்க்கிழமை வரை நடைபெறவுள்ளது. இத் தினங்களில் தினமும் காலை 7 மணிக்கு அபிஷேக பூசை யுடன் இலட்சார்ச்சனை ஆரம்பமாவதுடன் மாலை 4 மணிக்கு இலட்சார்ச்சனை நடைபெறும். நாளை செவ் வாய்க்கிழமை சிவராத்திரி தினத்தன்று ஸ்கந்த வழிபாட் டுடன் ஆரம்பமாகி தொடர்ந்து சண்முகப் பெருமான் வீதி யுலா வரும் நிகழ்வும் இடம்பெறும். (இ)

# மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க் கங்களின் கட்டமைப்பு மற் றும் பராமரிப்பு வேலைகளுக் காக இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை -

**யாழ். பிரதேசத்தில்-** மண்டைதீவு, மண்கும் பான், அல்லைப்பிட்டி, வேலணை ஒரு பகுதி, மண் கும்பான் தேசிய நீர்வழங்கல் வடிகால் சபை, மண்கும்பான் கடற்படை முகாம், மண்டை தீவு வெலுசுமண இலங்கை கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின்விநி யாகம் தடைப் பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.



# உன்னைச் சரணடைந்தேன்

## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 93

## இராணுவம் புகுந்தது

### போராளி பாப்பாவின் சந்திப்பு

அடுத்தடுத்த நாட்களில் புலிகளின் தென்மராட்சிப் பொறுப்பாளராயிருந்த பாப்பா ஒரு சிலருடன் என்னைச் சந்தித்தார். இடப்பெயர்வால் மக்கள் மனம் சோர்ந்து போய் இருக்கின்றனர் என்றும் அவர்களை ஊக்கப்படுத்த கூட்டங்களை நடத்த வேண்டும் என்றும் அதில் நான் பேச வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். "உங்களுக்குத் தானே பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பேசச் சொல்லுங்களேன்" என்று வீம்புக்குச் சொன்னேன். பின்னர் அவர்களிடம் 'மக்கள் இருக்க இடமின்றி, குழந்தைகளோடு மழை பெய்யப் பெய்ய மரங்களின் கீழ் இருக்கின்றனர். இது பேசுவதற்குரிய நேரமில்லை. ஆலயங்களுக்குப் போடுகிற பந்தல் மரங்கள் கோயில்களில் இருக்கும். அதைக் கொண்டு வந்து வீதியோரம் முழுவதும் பந்தல் போட்டு, மக்களுக்கு முதலில் நிழல் கொடுங்கள். ஒரு நாளைக்கு ஒரு நேரமாவது பொதுவில் கஞ்சி காய்ச்சி, மக்களைப் பசியாறச் செய்யுங்கள் அதற்குப் பிறகு பேசலாம்" என்று சொல்லி அனுப்பி வைத்தேன். செய்கிறோம்' என்று போனவர்கள் அதுபற்றி எதுவித நடவடிக்கையும் எடுக்கவேயில்லை.

★ ★ ★

### மீண்டும் யாழ் சென்றோம்

நாம் இடம்பெயர்ந்து வந்து இருபது நாட்களுக்கு மேலாகியும் யாழ்ப்பாணத்திற்குள் இராணுவம் நுழையவில்லை. ஒரு சிலர் துணிந்து சைக்கிளில் யாழ் சென்று தங்கள் வீடுகளைப் பார்த்து வந்தனர். நாமும் ஒரு தரம் சென்றால் என்ன? என முடிவு செய்து, இளைஞர்கள் எல்லோருமாகச் சைக்கிளில் கம்பன் கோட்டத்திற்குச் சென்றோம். படு பயங்கரமான அனுபவம் அது. யாழ்ப்பாணம் முழுவதும் சனநடமாட்டமின்றி மயானமாய்க் காட்சி தந்தது. இடையிடையே 'ஷெல்' சத்தமும் விமானக் குண்டு வீச்சுச் சத்தமும் கேட்டபடி இருந்தன. அநாதரவாய் விடப்பட்ட நாய்கள் பசியில் ஊளையிட்டுக் கொண்டிருந்தன. போட்டது போட்டபடி போனதால் கோட்டம் கலைந்து கிடந்தது. நாம் கோயிலாய்ப் போற்றிய இடம் அது. மனம் துடிக்க, விறுவிறுவென கோட்டத்திற்குள் போய் அனைத்தையும் சுத்தம் செய்து கோட்டம் முழுவதும் கழுவித் துடைத்து, விளக்கேற்றித் தூபமிட்டு, தெய்வீகமாய் ஒழுங்கு செய்து கதவுகள் அனைத்தையும் திறந்து விட்டு பொருள்களையெல்லாம் அப்படியப்படியே வைத்துவிட்டு, நான் போற்றி வந்த எனது குரு நாதர்களது திருவடிகளை மட்டும் தூக்கிக் கொண்டு திரும்பி வந்தோம்.

★ ★ ★

### சிம்மாசனங்கள் களவு போயினவா?

இதன் பிறகு புலிகள் யாரையும் யாழ் போக அனுமதிக்கவில்லை. இக்காலத்தில் யாழ் வீடுகளில் இருந்த பொருள்களை புலிகள் ஏற்றத்தொடங்கினர். கம்பன் விழா நிகழ்ச்சிகளுக்காக சீவரத்தினம் ஆசாரியாரைக் கொண்டு விதம் விதமான சிம்மாசனங்கள் பலவற்றை கோட்டத்தில் செய்து வைத்திருந்தோம். அவற்றையும் புலிகள் ஏற்றிச் செல்வதாய் சிலர் வந்து சொன்னார்கள். பதறிப்போனோம். உடனே புதுவையைத் தேடிச் சென்று, "எங்கள் பொருள்களை ஏற்றியது உண்மையா?" எனக் கேட்டோம். அவர் சங்கடப்பட்டு, 'ஒன்றுக்கும் கவலைப் படாதீங்கோ. பாதுகாக்கத்தான் கொண்டு வந்திருக்கிறம், சூழ்நிலை சரியானதும் எல்லாவற்றையும் திருப்பித் தருவோம்" என்றார். எல்லாம் ஆனை வாய்க் கரும்பு தான் என நினைத்துக் கொண்டு மனவருத்தத்துடன் திரும்பி வந்தோம். இராணுவம் யாழினுள் புகுந்து சில காலத்தின் பின், நாம் அங்கு சென்றபோது எங்கள் பொருள்கள் எல்லாம் அப்படியே இருந்தன. அப்போது தான் அவை ஏற்றப்படவில்லை எனும் உண்மை தெரிந்தது. புதுவை அவற்றை ஏற்றியதாய் ஏன் சொன்னார்? என்பது, இன்று வரை விளங்காமலேயே இருக்கிறது.

★ ★ ★

## குமாரதாசன் குடும்பம் கொழும்பு புறப்பட்டது

மீண்டும் விட்ட இடத்திலிருந்து விடயங்களைத் தொடர்கிறேன். சாவகச்சேரியில் எல்லோரும் மகிழ்வாக இருந்த போதிலும், குடும்பஸ்தர்கள் எதிர்காலம் பற்றி உள்ளூரக் கவலைப்படத் தொடங்கினர். இந்த நேரத்தில் கொழும்பு போய் விட்டால் வெளிநாடு, போய் விடலாம் எனும் எண்ணம் என் தங்கைக்கு வர, குமாரதாசன் குடும்பம் கொழும்பு போவதென முடிவு செய்தது. நாட்டுச் சூழ்நிலையால் புலிகளின் 'பாஸ்' முறை அப்போது தளர்ந்திருந்தது. அச் சூழ்நிலையைப் பயன்படுத்தி, 'பாஸ்' பெற்று அவர்கள் கொழும்பு சென்றனர். சிவசங்கரும் அவர்களோடு கொழும்பு சென்றான். குமாரதாசனது மகன் பிரசன்னாவை, நான் தான் ஆசையாய் வளர்த்தேன் அது போலவே குமாரதாசனது மனைவியான தர்ஷியை, என் தங்கையாய் அன்றிப் பிள்ளையாய் வளர்த்தவன் நான். அவர்களதும் குமாரதாசனதும் பிரிவு என்னை மிகவும் பாதித்தது. அப்படியே அவர்கள் வெளிநாடு சென்று விட்டால், அவர்களை பார்க்க முடியாமல் போய் விடுமோ? என நினைந்து படுத்திருந்து அழுவேன். கையிலிருந்த காசும் கரையத் தொடங்கி விட்டது. நானும் ஒரு தரம் கொழும்பு சென்று, அவர்களைப் பார்த்து விட்டு வெளிநாட்டில் வசிக்கும் சகோதரர்களிடம் பண உதவியும் பெற்றுத் திரும்பலாம் என முடிவு செய்தேன்.

★ ★ ★


### பாஸ் கிடைத்தது

எனது முடிவின் படி நானும், ரத்தினகுமாரும், ரகுபரனும், அவனது தந்தையும், கொழும்பு செல்ல 'பாஸ்' எடுக்க முடிவு செய்தோம். சாவகச்சேரியில் விண்ணப்பித்தால் ஒரு வேளை எங்களைத் தெரிந்து, 'பாஸ்' தராமல் விட்டு விடுவார்களோ என எண்ணி, வடமராட்சி சென்று பாஸுக்காய் விண்ணப்பித்தோம். ஆச்சரியமாய் அடுத்த நாளே 'பாஸ்' கிடைத்து விட்டது. ஆனாலும் பயம் போகவில்லை. பாஸ் கிடைத்து, கொழும்பு செல்லும் வழியில், நல்லூர் முதலாளி குடும்பத்தினரை புலிகள் திருப்பி அனுப்பிய செய்தி தெரிய வந்ததால், எங்களையும் அப்படி அனுப்பி விடுவார்களோ எனப் பயந்தோம்.

★ ★ ★

### கம்பன் கோட்டம் பிரபாகரனது மாளிகையானது

இந் நிலையில் யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றியது. நல்லூரில் பிரபாகரனது மாளிகையை, இராணுவம் மீட்டு விட்டதாக வானொலிச் செய்திகள் முழங்கின, நல்லூரில் பிரபாகரன் இருக்கவில்லை என்பது எங்களுக்குத் தெரியும். பின்னர் பிரபாகரனின் மாளிகை என்று எதைச் சொல்கிறார்கள் எனக் குழம்பினோம். நல்லூர் மனோன்மணி அம்மன் கோயிலின் பக்கத்தில் ஆறுமுகம் ஐயா என்பவரது பெரிய மேல் வீடு இருந்தது. இயக்கம் அதனை முகாமாக வைத்திருந்தது. அதைத் தான் பிரபாகரனது மாளிகை என்கிறார்களா? அல்லது, எங்களது கம்பன் கோட்டத்தைத் தான், பிரபாகரனது மாளிகை என்கிறார்களா? என உள்ளுணர்வில் ஓர் ஐயம். எங்கோ தூரத்தில் ஒரு வீட்டில், சைக்கிள் டைனமோ வைத்து ரி.வி. பார்ப்பதாய் அறிந்து, இரவுச் செய்தி பார்க்க அவ் வீட்டிற்குச் சென்றோம். வெளி மதிலால் எட்டி ரி.வி. செய்தி பார்த்த போது செய்தியில் எங்கள் கம்பன் கோட்டம் தான், பிரபாகரனது மாளிகையாய் காட்டப்பட்டது. அதிர்ந்து போனோம். அடுத்த நாள் கொழும்பு புறப்பட வேண்டும். செய்தி பிழையானது என்பதாலும், கம்பன் கோட்டத்தை அனைவருக்கும் தெரியும் என்பதாலும், புலிகளுடனான எமது முரண்பாடு பிரசித்தம் என்பதாலும், பயப்படத் தேவையில்லை என நினைந்து அடுத்த நாள் புறப்பட்டோம்.



★ ★ ★

### தடுத்த புலிப் போராளி

எங்களது முயல்களை நெல்லியடித் தயாபரனிடமும், நாய்களை மணிமாறன், பிரசாந்தனிடமும் ஒப்படைத்து விட்டு அடுத்த நாள் காலை விதி விளையாடிய ஒரு நேரத்தில், நாலுபேரும் கொழும்பு நோக்கிப் புறப்பட்டோம். ஒவ்வொரு புலிகளின் 'சென்றி'களையும் தாண்டும் போது, நெஞ்சு படபடக்கும். ஆனால், யாரும் எங்களைத் தடுக்கவில்லை புலிகளின் எல்லை தாண்டுகின்ற கடைசித் தடை முகாம் வர, இனித் தப்பினோம் என நினைத்து அதைத் தாண்ட முற்படுகையில், ஒரு போராளி என்னைத் தனியே அழைத்தான். நெஞ்சு விறைத்து விட்டது. உள்ளே அழைத்துச் சென்று, "அண்ணே நீங்கள் போவது புத்திசாலித்தனம் இல்லை உங்களைப் போல முக்கிய மானவர்களை, வவுனியாவிலிருந்து ஹெலிக்கொப்டரில் யாழ்ப்பாணம் கொண்டு போய் இறக்கி, முக்கியமானவர்கள் இடம்பெயரவில்லை என அரசாங்கம் காட்ட நினைக்கும். அதோட உங்கட கம்பன் கோட்டத்தைத் தான், தலைவற்ற மாளிகை என்று நேற்றுக் காட்டினவங்கள். அதாலயும் உங்களுக்குப் பிரச்சினை வரலாம் என்ற படியால், நீங்கள் கொழும்பு போகாமல் விடுவது நல்லது" என்றான். நான் துணிந்து "தம்பி! கையில செலவுக்குக் காசில்ல, கொழும்புக்குப் போய், வெளிநாட்டில இருக்கிற அண்ணனிட்ட காசு வாங்கி வரத்தான் போறன். கம்பன் கோட்டத்தை எல்லோருக்கும் தெரியும். அவங்கள் பிழையாய் அறிவிச்சுப் போட்டாங்கள் என்றபடியால் பயமில்லை. நான் போயிற்று வாரன்" என்றேன். "அதுக்கு மேல உங்கள் இஷ்டம்" என்று சொல்லி, அவன் என்னை அனுப்பி விட்டான். தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என நினைத்துக் கொண்டு கஷ்டகாலம் காத்திருப்பது தெரியாமல் தடையைக் கடந்து வவுனியாவுக்குள் கால்வைத்தோம்.

★ ★ ★

### தடுத்து வைக்கப்பட்டோம்

புலிகளின் இறுதித் தடை தாண்டியதும், வயல் வரம்புகள் ஊடாக நடந்து ஒரு பாலம் தாண்டி, இராணுவ 'செக் போஸ்ட்'க்குள் நுழைய வேண்டும் ஒவ்வொருவராக அடையாள அட்டை பார்த்து பின்னர் வவுனியா 'ரயில்வே ஸ்ரேஷனு' க்கு அருகிலிருந்த தடை முகாமுக்கு அனுப்பி வைப்பார்கள். அங்கு கொழும்பில் நாம் சென்று தங்கப் போகிற முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றைக் கொடுக்க வேண்டும். பிரச்சினை ஒன்றும் இல்லையென்றால், நாம் கொடுக்கிற முகவரிக்கு இராணுவம் எங்கள் வருகையை அறிவிக்கும். அவர்கள் வந்து கையொப்பம் இட்டு எங்களை அழைத்துச் செல்ல வேண்டும் அது தான் அப்போதைய நடைமுறையாய் இருந்தது. பொதுவாக என் தோற்றம் கண்டு யாரும் என்னை விசாரிப்பதில்லை. ரத்தினகுமார், ரகுபரன் ஆகியோரைத் தான் விசாரிப்பார்கள் என நினைத்திருந்தோம். 'செக் போஸ்ட்' தாண்டும் போது ஓர் இராணுவ வீரன் என்னைத் தான் அழைத்து, பொதுப்பட விசாரித்தான். கம்பன் கோட்டத்தை பிரபாகரனின் மாளிகை என்று அறிவித்திருந்த படியால் ஏதாவது பிரச்சினை வருமோ? எனும் பயம் உள்ளிருந்தது. ஆனால், அவன் அது பற்றி ஏதும் கேட்காமல் என்னைப் போகச் சொல்ல, எல்லோருமாகத் தடை முகாமுக்கு வந்து சேர்ந்தோம்.

(தொடரும்...)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல்- 2018

## வடக்கு மாகாணம் யாழ். மாவட்டம்
### நல்லூர் பி.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| இ.த.அ.க. | 5953 | 6 |
| அ.இ.த.க. | 4339 | 5 |
| ஈ.ம.ஜ.க. | 3562 | 4 |
| சுயேச்சை | 1983 | 2 |
| ஸ்ரீ.ல.சு.க. | 903 | 1 |
| ஐ.தே.க. | 884 | 1 |

மொத்த வாக்குகள் - 27100
அளிக்கப்பட்டவை - 19024
நிராகரிக்கப்பட்டவை - 347
செல்லுபடியானவை - 18677

## வடக்கு மாகாணம் யாழ். மாவட்டம்
### வலி.மேற்குப் பி .ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| இ.த.அ.க. | 8119 | 9 |
| இ.த.கா. | 5638 | 6 |
| ஈ.ம.ஜ.க. | 3511 | 4 |
| ஐ.தே.க. | 3109 | 3 |
| சுயேச்சை | 1408 | 2 |
| ஸ்ரீ.சு.க. | 1279 | 1 |

## வடக்கு மாகாணம் யாழ். மாவட்டம்
### வலி.தென்மேற்கு பி.ச.

| | ஆசனம் | |
|---|---|---|
| இ.த.அ.க. | 10649 | 12 |
| ஈ.ம.ஜ.க. | 6305 | 7 |
| அ.இ.த.கா. | 4083 | 4 |
| த.ஜ.வி.மு | 2216 | 2 |
| ஐ.தே.க. | 1492 | 2 |
| ஸ்ரீ.சு.க | 652 | 1 |

மொத்த வாக்குகள் - 37053
அளிக்கப்பட்டவை - 26061
நிராகரிக்கப்பட்டவை - 474
செல்லுபடியானவை - 25587

## வடக்கு மாகாணம் யாழ். மாவட்டம்
### வலி. கிழக்குப் பி.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| இ.த.அ.கா. | 12300 | 13 |
| ஈ.ம.ஜ.க. | 6366 | 6 |
| அ.இ.த.கா. | 5649 | 6 |
| சுயேச்சை | 3858 | 4 |
| த.ஜ.வி.மு. | 3294 | 3 |

மொத்த வாக்குகள் - 52517
அளிக்கப்பட்டவை - 35803
நிராகரிக்கப்பட்டவை - 746
செல்லுபடியானவை - 35054

## வடக்கு மாகாணம் யாழ். மாவட்டம்
### பருத்தித்துறை ந.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| அ.இ.த.க. | 2199 | 6 |
| ஈ.த.அ.க. | 1880 | 5 |
| ஈ.ம.ஜ.க | 777 | 2 |
| சுயேச்சை | 404 | 1 |
| த.ஜ.வி.மு. | 403 | 1 |

மொத்த வாக்குகள் - 7864
அளிக்கப்பட்டவை - 5981
நிராகரிக்கப்பட்டவை - 69
செல்லுபடியானவை - 5912

## வடக்கு மாகாணம் யாழ். மாவட்டம்
### காரைநகர் பி.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| இ.த.அ.க. | 1623 | 3 |
| சுயேச்சை | 1080 | 3 |
| ஐ.தே.க. | 1263 | 2 |
| ஈ.ம.ஜ.க. | 1197 | 2 |
| இ.த.கா. | 359 | 1 |

மொத்த வாக்குகள் - 8170
அளிக்கப்பட்டவை - 5905
நிராகரிக்கப்பட்டவை - 76
செல்லுபடியானவை - 5829

## வடக்கு மாகாணம் யாழ். மாவட்டம்
### வேலணை பி .ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| இ.த.க. | 3627 | 8 |
| ஈ.ம.ஜ.க. | 2891 | 6 |
| பொ.ஜ.பெ. | 899 | 2 |
| இ.த.கா. | 737 | 1 |
| ஐ.தே.க. | 403 | 1 |
| த.வி.கூ. | 145 | 1 |
| ஸ்ரீ.சு.க. | 306 | 1 |

## வடக்கு மாகாணம் யாழ். மாவட்டம்
### சாவகச்சேரி பி.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| இ.த.அ.க. | 9672 | 13 |
| அ.இ.த.க. | 5732 | 6 |
| ஈ.ம.ஜ.க. | 3799 | 4 |
| ஸ்ரீ.ல.சு.க. | 2312 | 3 |
| த.வி.கூ. | 1935 | 2 |
| ஐ.தே.க. | 1540 | 2 |
| த.ச.ஜ.க. | 758 | 1 |

## வடக்கு மாகாணம் யாழ். மாவட்டம்
### நெடுந்தீவுப் பி.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| ஈ.ம.ஜ.க. | 1246 | 6 |
| இ.த.க. | 888 | 4 |
| சுயேச்சை | 292 | 2 |
| ஐ.தே.க. | 97 | 1 |

## வடக்கு மாகாணம் வவுனியா மாவட்டம்
### வவுனியா ந.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| இ.த.அ.க. | 5259 | 8 |
| ஸ்ரீ.ல.சு.க. | 2103 | 3 |
| ஈ.ம.ஜ.க. | 1887 | 3 |
| ஐ.தே.க. | 1869 | 3 |
| அ.இ.த.கா | 844 | 1 |

மொத்த வாக்குகள் - 20300
அளிக்கப்பட்டவை - 13670
நிராகரிக்கப்பட்டவை - 208
செல்லுபடியானவை - 13462

## வடக்கு மாகாணம் வவுனியா மாவட்டம்
### வவுனியா வடக்கு பி.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| இ.த.அ.க. | 2794 | 8 |
| பொ.ஜ.பெ. | 1870 | 5 |
| ஐ.தே.க. | 1370 | 3 |
| அ.இ.த.கா. | 1254 | 3 |
| ஸ்ரீ.ல.சு.க. | 973 | 2 |

மொத்த வாக்குகள் - 12166
அளிக்கப்பட்டவை - 10151
நிராகரிக்கப்பட்டவை - 166
செல்லுபடியானவை - 9985

## வடக்கு மாகாணம் வவுனியா மாவட்டம்
### வவு.தெற்கு (தமிழ்) பி.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| இ.த.அ.க. | 11296 | 11 |
| ஸ்ரீ.ல.சு.க. | 7166 | 5 |
| ஐ.தே.க. | 5836 | 4 |
| த.ஜ. வி.மு. | 5335 | 4 |
| சுயேச்சை | 2914 | 2 |

மொத்த வாக்குகள் - 55005
அளிக்கப்பட்டவை - 39969
நிராகரிக்கப்பட்டவை - 1005
செல்லுபடியானவை - 38964

## வடக்கு மாகாணம் வவுனியா மாவட்டம்
### வெங்கலச்செட்டிக் குளம் பி.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| ஸ்ரீ.சு.க. | 2923 | 4 |
| ஐ.தே.க. | 2802 | 4 |
| இ.த.க. | 2671 | 5 |
| த.வி.கூ. | 2091 | 3 |

## வடக்கு மாகாணம் வவுனியா மாவட்டம்
### வவுனியா தெற்குப் பி .ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| இ.த.க. | 11296 | 11 |
| ஸ்ரீ.சு.க. | 7166 | 5 |
| ஐ.தே.க. | 5836 | 4 |
| த.வி.கூ. | 5335 | 4 |
| சுயேச்சை | 2914 | 2 |
| ஈ.ம.ஜ.க. | 2685 | 2 |
| பொ.ஜ.பெ | 11182 | 1 |

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல் - 2018

## வடக்கு மாகாணம் வவுனியா மாவட்டம்

### வவுனியா தெற்கு (சிங்களம்) பி.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| பொ.ஜ.பெ. | 3916 | 8 |
| ஐ.தே.க. | 2178 | 4 |
| ஸ்ரீ.ல.சு.க. | 1223 | 2 |
| ம.வி.மு. | 923 | 1 |

மொத்த வாக்குகள் - 10448
அளிக்கப்பட்டவை - 9297
நிராகரிக்கப்பட்டவை - 119
செல்லுபடியானவை - 9178

## வடக்கு மாகாணம் முல்லைத்தீவு மாவட்டம்

### புதுக்குடியிருப்பு பி .ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| இ.த.க. | 11771 | 11 |
| சுயேட்சை | 4463 | 4 |
| ஐ.தே.க. | 2757 | 2 |
| ஸ்ரீ.சு.க. | 2136 | 2 |
| இ.த.கா. | 1541 | 1 |
| த.வி.கூ. | 1030 | 1 |
| ஈ.ம.ஜ.க. | 911 | 1 |

## வடக்கு மாகாணம் முல்லைத்தீவு மாவட்டம்

### கரைதுரைபற்று பி.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| இ.த.அ.கா. | 6292 | 9 |
| ஐ.தே.க. | 2833 | 3 |
| சுயேச்சை | 2636 | 3 |
| பொ.ஜ.பெ | 2067 | 2 |
| த.ஜ.வி.மு. | 1819 | 2 |

மொத்த வாக்குகள் - 26773
அளிக்கப்பட்டவை - 21266
நிராகரிக்கப்பட்டவை - 370
செல்லுபடியானவை - 20896

## வடக்கு மாகாணம் முல்லைத்தீவு மாவட்டம்

### மாந்தை கிழக்கு பி.ச.

| | |
|---|---|
| இ.த.அ.க. | 1836 |
| ஐ.தே.க. | 1505 |
| ஸ்ரீ.ல.சு.க. | 523 |
| ஈ.ம.ஜ.க. | 1092 |

மொத்த வாக்குகள் - 5184
அளிக்கப்பட்டவை - 4336
நிராகரிக்கப்பட்டவை - 49
செல்லுபடியானவை - 4287

## வடக்கு மாகாணம் கிளிநொச்சி மாவட்டம்

### பூநகரி பி.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| இ.த.அ.க. | 5807 | 11 |
| சுயேச்சை | 2429 | 4 |
| ஐ.தே.க. | 1260 | 2 |
| ஸ்ரீ.ல.சு.க. | 945 | 2 |
| ஈ.ம.ஜ.க. | 871 | 1 |

மொத்த வாக்குகள் - 10220
அளிக்கப்பட்டவை - 6860
நிராகரிக்கப்பட்டவை - 150
செல்லுபடியானவை - 6751

## வடக்கு மாகாணம் கிளிநொச்சி மாவட்டம்

### கரைச்சி பி.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| இ.த.அ.க. | 21445 | 17 |
| சுயேச்சை | 14489 | 11 |
| அ.இ.த.கா. | 2433 | 2 |
| அ.இ.ம.கா. | 4384 | 3 |
| ஸ்ரீ.ல.சு.க. | 1899 | 2 |
| ஐ.தே.க. | 1570 | 1 |

மொத்த வாக்குகள் - 61315
அளிக்கப்பட்டவை - 46028
நிராகரிக்கப்பட்டவை - 1030
செல்லுபடியானவை - 44998

## வடக்கு மாகாணம் கிளிநொச்சி மாவட்டம்

### பச்சிலைப்பள்ளி பி.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| இ.த.அ.கா. | 2953 | 6 |
| சுயேச்சை | 2070 | 4 |
| அ.இ.த.கா. | 651 | 1 |
| ஈ.ம.ஜ.க. | 465 | 1 |
| ஸ்ரீ.ல.சு.க. | 330 | 1 |

மொத்த வாக்குகள் - 10220
அளிக்கப்பட்டவை - 6860
நிராகரிக்கப்பட்டவை - 109
செல்லுபடியானவை - 6751

## வடக்கு மாகாணம் மன்னார் மாவட்டம்

### நானாட்டான் பி.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| இ.த.அ.க. | 5301 | 7 |
| ஐ.தே.க. | 3589 | 5 |
| த.ஜ.வி.மு. | 2339 | 3 |
| ஸ்ரீ.ல.சு.க. | 430 | 1 |
| பொ.ஜ.பெ | 348 | - |

மொத்த வாக்குகள் - 15702
அளிக்கப்பட்டவை - 12791
நிராகரிக்கப்பட்டவை - 96
செல்லுபடியானவை - 12695

## வடக்கு மாகாணம் மன்னார் மாவட்டம்

### மன்னார் ந.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| இ.த.க. | 4355 | 7 |
| ஐ.தே.க. | 3424 | 4 |
| த.வி.கூ. | 1231 | 2 |
| ஸ்ரீ.சு.க. | 903 | 1 |
| ஈ.ம.ஜ.க. | 409 | 1 |
| பொ.ஜ.பெ | 395 | 1 |

## வடக்கு மாகாணம் மன்னார் மாவட்டம்

### முசலி பி.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| ஐ.தே.க. | 5427 | 7 |
| ஸ்ரீ.ல.மு.கா. | 3225 | 4 |
| இ.த.அ.கா. | 1174 | 2 |
| ஸ்ரீ.ல.சு.க. | 1041 | 1 |
| பொ.ஜ.பெ | 348 | 1 |

மொத்த வாக்குகள் - 14518
அளிக்கப்பட்டவை - 12067
நிராகரிக்கப்பட்டவை - 57
செல்லுபடியானவை - 12010

## வடக்கு மாகாணம் மன்னார் மாவட்டம்

### மன்னார் பி .ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| ஐ.தே.க. | 5884 | 7 |
| இ.த.க. | 5029 | 7 |
| ஸ்ரீ.மு.கா. | 1995 | 2 |
| ஸ்ரீ.சு.க. | 1517 | 2 |
| பொ.ஜ.பெ. | 1229 | 1 |
| த.வி.கூ. | 1118 | 1 |
| ஈ.ம.ஜ.க. | 624 | 1 |

## கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு மாவட்டம்

### ஏறாவூர்ப்பற்று பி.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| ஸ்ரீ.ல.சு.க. | 9363 | 8 |
| த.ம.வி.பு. | 9229 | 8 |
| இ.த.அ.க. | 8891 | 7 |
| ஐ.தே.க. | 4893 | 4 |
| த.ஜ.வி.மு. | 1983 | 2 |

மொத்த வாக்குகள் - 55723
அளிக்கப்பட்டவை - 37233
நிராகரிக்கப்பட்டவை - 620
செல்லுபடியானவை - 36613

## கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு மாவட்டம்

### காத்தான்குடி ந.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| ஸ்ரீ.ல.சு.க. | 12499 | 10 |
| ந.தே.மு. | 5815 | 4 |
| மு.தே.கூ. | 4636 | 3 |
| அ.இ.ம.கா. | 779 | 1 |
| ம.வி.மு. | 235 | - |

மொத்த வாக்குகள் - 29966
அளிக்கப்பட்டவை - 24626
நிராகரிக்கப்பட்டவை - 292
செல்லுபடியானவை - 24334

## கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு மாவட்டம்

### மண்முனை தென்மேற்குப் பி.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| இ.த.அ.கா. | 5304 | 6 |
| த.ஜ.வி.மு. | 2718 | 3 |
| ஐ.தே.க. | 2706 | 3 |
| த.ம.வி.பு. | 1218 | 2 |
| ஸ்ரீ.ல.சு.க. | 601 | 1 |

மொத்த வாக்குகள் - 18357
அளிக்கப்பட்டவை - 13527
நிராகரிக்கப்பட்டவை - 201
செல்லுபடியானவை - 9178

## கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு மாவட்டம்

### ஏறாவூர் பி.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| மு.தே.கூ. | 4237 | 5 |
| ஐ.தே.க. | 4024 | 4 |
| ஸ்ரீ.ல.சு.க. | 2815 | 3 |
| இ.த.அ.க. | 1105 | 2 |
| ஐ.ச.கூ. | 1308 | 1 |

மொத்த வாக்குகள் - 18600
அளிக்கப்பட்டவை - 14971
நிராகரிக்கப்பட்டவை - 88
செல்லுபடியானவை - 14883

## கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டம்

### பொத்துவில் பி.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| ஐ.தே.க. | 6114 | 6 |
| ஸ்ரீ.ல.சு.க. | 4356 | 5 |
| அ.இ.ம.கா. | 4288 | 4 |
| இ.த.அ.க. | 2271 | 3 |
| சுயேச்சை | 1302 | 1 |

மொத்த வாக்குகள் - 25392
அளிக்கப்பட்டவை - 20360
நிராகரிக்கப்பட்டவை - 178
செல்லுபடியானவை - 20182

காலைக்கதிர் Kalaikkathir



# உள்ளூராட்சி மன்றத் தேர்தல் - 2018

## கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டம்

### அம்பாறை ந.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| பொ.ஜ.பெ | 6173 | 9 |
| ஐ.தே.க. | 3402 | 4 |
| ஸ்ரீ.ல.சு.க. | 2787 | 3 |
| ம.வி.மு. | 812 | 1 |
| சுயேச்சை | 470 | 1 |

மொத்த வாக்குகள் - 15957
அளிக்கப்பட்டவை - 13812
நிராகரிக்கப்பட்டவை - 140
செல்லுபடியானவை - 13672

## கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டம்

### அக்கரைப்பற்று மா.ந.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| தே.கா. | 11988 | 13 |
| ஐ.தே.க. | 3329 | 4 |
| ந.தே.மு. | 2711 | 3 |
| பொ.ஜ.பெ. | 149 | - |

மொத்த வாக்குகள் - 23763
அளிக்கப்பட்டவை - 18748
நிராகரிக்கப்பட்டவை - 133
செல்லுபடியானவை - 18615

## கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டம்

### லாஹுகல பி.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| பொ.ஜ.பெ. | 2260 | 7 |
| ஐ.தே.க. | 1905 | 5 |
| இ.சு.க. | 1835 | 5 |
| ம.வி.மு. | 352 | 1 |

மொத்த வாக்குகள் - 7046
அளிக்கப்பட்டவை - 6409
நிராகரிக்கப்பட்டவை - 57
செல்லுபடியானவை - 6352

## கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டம்

### இறக்காமம் பி.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| ஐ.தே.க. | 3283 | 5 |
| ஸ்ரீ.ல.சு.க. | 2473 | 4 |
| அ.இ.ம.கா | 2313 | 3 |
| பொ.ஜ.பெ. | 380 | 1 |

மொத்த வாக்குகள் - 10288
அளிக்கப்பட்டவை - 8513
நிராகரிக்கப்பட்டவை - 64
செல்லுபடியானவை - 8449

## கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டம்

### அட்டாளைச்சேனை பி.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| ஐ.தே.க. | 11361 | 8 |
| தே.கா. | 7453 | 6 |
| அ.இ.ம.கா. | 4384 | 3 |
| பொ.ஜ.பெ. | 779 | 1 |
| சுயேச்சை | 9 | - |

மொத்த வாக்குகள் - 30654
அளிக்கப்பட்டவை - 24192
நிராகரிக்கப்பட்டவை - 206
செல்லுபடியானவை - 23986

## கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டம்

### நிந்தவூர் பி.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| அ.இ.ம.க. | 7260 | 6 |
| தே.ம.க. | 7931 | 6 |
| ஸ்ரீ.ல.சு.க. | 1304 | 1 |
| சுயே.2 | 183 | - |
| பொ.ஜ.பெ | 56 | - |

மொத்த வாக்குகள் - 28176
அளிக்கப்பட்டவை - 16889
நிராகரிக்கப்பட்டவை - 139
செல்லுபடியானவை - 16750

## தென் மாகாணம் அம்பாந்தோட்டை மாவட்டம்

### திஸ்ஸமஹாராம பி.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| பொ.ஜ.பெ. | 20935 | 12 |
| ஐ.தே.க. | 14691 | 7 |
| ம.வி.மு. | 6842 | 3 |
| ஐ.ம.சு.கூ. | 2167 | 1 |
| ஜன.ச.பெ. | 75 | - |

மொத்த வாக்குகள் - 55479
அளிக்கப்பட்டவை - 45122
நிராகரிக்கப்பட்டவை - 351
செல்லுபடியானவை - 44771

## மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம்

### ஜயவர்த்தனபுர கோட்டே மாந.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| பொ.ஜ.பெ. | 22068 | 18 |
| ஐ.தே.க. | 17190 | 12 |
| ஐ.ம.சு.கூ. | 7676 | 5 |
| ம.வி.மு. | 4885 | 3 |
| ஐ.தே.சு.மு. | 522 | - |

மொத்த வாக்குகள் - 74480
அளிக்கப்பட்டவை - 54552
நிராகரிக்கப்பட்டவை - 1263
செல்லுபடியானவை - 53289

## தென் மாகாணம் மாத்தறை மாவட்டம்

### பிட்டபெத்தர பி.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| இ.பொ.பெ | 17952 | 12 |
| ஐ.தே.க. | 9275 | 6 |
| ம.வி.மு | 9275 | 2 |
| ஐ.ம.சு.கூ. | 1902 | 1 |

மொத்த வாக்குகள் - 31770
அளிக்கப்பட்டவை - 32200
நிராகரிக்கப்பட்டவை - 430
செல்லுபடியானவை - 44706

## வடமேல் மாகாணம் குருநாகல் மாவட்டம்

### பொல்கஹவெல பி.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| பொ.ஜ.பெ. | 31290 | 20 |
| ஐ.தே.க. | 21164 | 13 |
| இ.ம.சு.கூ. | 5977 | 4 |
| ம.வி.மு. | 3849 | 2 |

மொத்த வாக்குகள் - 80071
அளிக்கப்பட்டவை - 64027
நிராகரிக்கப்பட்டவை - 899
செல்லுபடியானவை - 63128

## மத்திய மாகாணம் கண்டி மாவட்டம்

### கடுகன்னாவை ந.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| பொ.ஜ.பெ. | 3392 | 7 |
| ஐ.தே.க. | 3261 | 6 |
| ஐ.ம.சு.கூ. | 643 | 1 |
| ம.வி.மு. | 376 | 1 |

மொத்த வாக்குகள் - 9924
அளிக்கப்பட்டவை - 8073
நிராகரிக்கப்பட்டவை - 233
செல்லுபடியானவை - 7840

## ஊவா மாகாணம் பதுளை மாவட்டம்

### அப்புத்தளை பி.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| ஐ.தே.க. | 9746 | 7 |
| பொ.ஜ.பெ. | 8375 | 6 |
| ஐ.ம.சு.கூ. | 8164 | 6 |
| ம.வி.மு. | 1819 | 1 |

மொத்த வாக்குகள் - 35080
அளிக்கப்பட்டவை - 28870
நிராகரிக்கப்பட்டவை - 766
செல்லுபடியானவை - 28104

## ஊவா மாகாணம் பதுளை மாவட்டம்

### ஊவாபரணகம பி.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| பொ.ஜ.பெ. | 22002 | 17 |
| ஐ.தே.க. | 16544 | 11 |
| ஐ.ம.சு.கூ. | 7255 | 5 |
| ம.வி.மு. | 3756 | 3 |
| சுயேச்சை | 2136 | 1 |

மொத்த வாக்குகள் - 64600
அளிக்கப்பட்டவை - 52937
நிராகரிக்கப்பட்டவை - 1844
செல்லுபடியானவை - 56693

## வட மத்.மாகாணம் பொலன்னறுவை மாவட்டம்

### ஹிங்குராங்கொடை பி.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| பொ.ஜ.பெ | 15716 | 13 |
| இ.சு.க. | 12929 | 10 |
| ஐ.தே.க. | 9872 | 8 |
| ம.வி.மு. | 2914 | 2 |

மொத்த வாக்குகள் - 50546
அளிக்கப்பட்டவை - 41940
நிராகரிக்கப்பட்டவை - 509
செல்லுபடியானவை - 41940

## தென் மாகாணம் காலி மாவட்டம்

### யக்கமுல்ல பி.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| பொ.ஜ.பெ. | 16132 | 12 |
| ஐ.தே.க. | 6659 | 5 |
| இ.ம.சு.கூ. | 2952 | 2 |
| ம.வி.மு. | 2515 | 2 |

மொத்த வாக்குகள் - 35394
அளிக்கப்பட்டவை - 29485
நிராகரிக்கப்பட்டவை - 482
செல்லுபடியானவை - 29003

## வட மத். மாகாணம் அனுராதபுரம் மாவட்டம்

### இராஜாங்கனை பி.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| பொ.ஜ.பெ. | 11318 | 9 |
| ஐ.தே.க. | 5480 | 4 |
| இ.சு.க. | 3938 | 3 |
| ம.வி.மு. | 1168 | 1 |

மொத்த வாக்குகள் - 28418
அளிக்கப்பட்டவை - 22766
நிராகரிக்கப்பட்டவை - 258
செல்லுபடியானவை - 22508

## வட மத். மாகாணம் அனுராதபுரம் மாவட்டம்

### றம்பாவே பி.ச.

| | | ஆசனம் |
|---|---|---|
| பொ.ஜ.பெ. | 9982 | 9 |
| ஐ.தே.க. | 7334 | 6 |
| ஸ்ரீ.ல.சு.க. | 2921 | 2 |
| ம.வி.மு. | 1895 | 2 |
| ஐ.தே.சு.மு. | 563 | - |

மொத்த வாக்குகள் - 27389
அளிக்கப்பட்டவை - 23427
நிராகரிக்கப்பட்டவை - 178
செல்லுபடியானவை - 23249

வினாத்தாள் 12 பகுதி- II இன் தொடர்ச்சி...

5. 3kg 500g உள்ள 250g எத்தனை?

.......................................................................................................

6. 75 ரொபிகளை ஒரு பிள்ளைக்கு 5 வீதம் எத்தனை பிள்ளைகளுக்கு கொடுக்கல

.......................................................................................................

7. பெறப்படும் எண்ணைஎழுதுக.

300 +85+ 9 = ..........................................................................

8. கழிக்குக.

784 - 126 = ..........................................................................

9.பெருக்குக.


97 x 6 = ..........................................................................

10. வகுக்குக

706 ÷ 6 = ..........................................................................

11. ஏறுவரிசையில் எழுதுக.

6701, 1248, 4672, 1636..........................................................................

12.  இவ் உருவிலுள்ள எத்தனை செங்கோணங்கள் உள்ளன.
..........................................................................

சரியான விடையைத் தெரிவுசெய்துஎழுதுக

13. இரவில் உலவித் திரியும் விலங்கு

1. ஊர்க்குருவி 2. மலைநாகனவாய் 3. நத்தை 4. கிளி

14. இலங்கையின் அரச இலச்சினையில் காணப்படும் குறியீடு

1. அரசம் இலை 2. அன்னம் 3. புறா 4.சந்திரன்

15. இலங்கைஅமைந்திருப்பது இந்தியாவுக்கு

1. வடக்கே 2. தெற்கே 3. மேற்கே 4. கிழக்கே





# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

வினாத்தாள் 12

தரம்-5 பிரபல ஆசிரியர் பகுதி II நேரம்- 1 மணித்தியாலம் 15 நிமிடம்

01. பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடைதருக

இடர் வரும் போதும் - உள்ளம்
இரங்கிடும் போதும்
உடன் பிறந்தவர் போல் - மாந்தர்
உறவுகொள்வர் அப்பா
ஓடும் உதிரத்தில் - வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும் - சாதி
தெரிவதுண்டோ அப்பா

நன்மைசெய்பவரேஉலகம்
நாடும் மேற்குலத்தார்
தின்மைசெய்பவரே - அண்டித்
தீண்டஒண்ணாதார்

கவிஞர் கவிமணிதேசிகவிநாயகம் பிள்ளை

1. உடன் பிறந்தவர் என்பதன் பொருள் யாது?

.......................................................................................................

2. ஒத்த சொல்லை பாடலில் இருந்து எழுதுக.

1. மக்கள் - ................................ 2. இரத்தம் - ................................

3. தந்தை - ................................ 4. மனம் - ................................

3. இப்பாடலைப் பாடியவர் யார்?

.......................................................................................................

4. உவமைத் தொடரை எழுதுக?

.......................................................................................................

5. மேற்குலத்தவர் எனப்படுபவர் யார்?

.......................................................................................................

6. பெயரெச்சம் ஒன்று தருக?

.......................................................................................................

7. விசிறியும் சுழியும் உள்ள சொல்லை எழுதுக?

..........................................................................................................................

8. இப்பாடலில் உள்ள எதிர்ச்சொல் சோடி ஒன்று எழுதுக?

..........................................................................................................................

02. எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி சொற்களாக்குக.

1. ர், மா, த, ந் ..........................................................................

2. த, ர், ன், ட, உ,பி, ந், ந, வ ..........................................................................

03. பின்வரும் சொற்களை “ம” வரிசைப்படி எழுதுக

மெத்தை, மோடன், மண், மாலை ..........................................................

04. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியங்களாக்குக

1. தருகின்றன/ தகவல்களையும்/ செய்தித்தாள்கள்/ படங்களுடன்/ செய்திகளையும்

..........................................................................................................................

2. வேண்டாம;/ இருக்க/ ஓதாமல்/ ஒருநாளும்

..........................................................................................................................

05.வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவு செய்து எழுதுக.

1.யானை பிளிறும் என்பது போல மயில் ........................................(கூவும், அகவும், பேசும்)

2.மாவுக்கு கன்று போல நெல்லுக்கு ........................................ ( நாற்று, வடலி, குட்டி)

3.நாய்க்கு குட்டி போல கிரிக்கு ........................................ ( குஞ்சு, குட்டி, பிள்ளை)

06.பின்வரும் பழமொழிகளின் கருத்தைஎழுதுக.

1.காற்றுள்ளபோதே தூற்றிக் கொள் ..........................................................................

2. ஆழமறியாமல் காலைவிடாதே ..........................................................................

07. வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள்ளிலிருந்து தெரிவு செய்து எழுதுக

1. நாங்கள் தினமும் காலையில் பால் ..........................................................................
(குடிப்போம், குடித்தோம்)

2. சிகிரியாஓவியங்களுள் அநேகமானவைபெண் உருவங்களாக ..............................................
(இருந்தது, இருந்தன)

3. கோழிகள் குப்பைகளைக் ........................................ (கிளறியது,கிளறின)

4. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கட்டடத்திறப்புவிழா ..........................................................
(நடைபெறுகின்றது, நடைபெறும்)





08. பின்வரும் ஆங்கிலவாக்கியங்களின் கருத்தைதமிழில் எழுதுக.

1. Please go out ..........................................................................

2. I have a pen..........................................................................

09. பின்வரும் வாக்கியத்தின் கருத்தினைஆங்கிலத்திற்குமாற்றிஆங்கிலஎழுத்துக்களில் எழுதுக.

1. நான் வகுப்பறையைப் பெருக்குவேன் ..........................................................................

10. பின்வரும் ஆங்கிலச் சொற்கள் ஒவ்வொன்றிலும் விடுபட்டுள்ளஎழுத்தைஅடைப்பினுள் இருந்துதெரிவுசெய்துஎழுதுக.

1. Rain bo --------------------- (w/u)

2. Rive --------------------- (r/u)

11. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைதமிழ் எழுத்துக்களில் எழுதுக.

நான் குளிக்கின்றேன் ..........................................................................

12. பின்வரும் சிங்களவாக்கியத்தின் கருத்தைதமிழில் எழுதுக.

மமபாடம் கறனவா ..........................................................................

13.நல்ல மாணவர்கள் எப்பொழுதும் நற்பழக்க வழக்கங்களையே கடைப்பிடிப்பார்கள். அம் மாண வர்கள் கடைப்பிடிக்கும் நல்லபழக்கங்கள் எனும் தலைப்பில் மூன்றுவாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்குமேல் இடம்பெறவேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருக்கவேண்டும்)

..........................................................................................................................

..........................................................................................................................

..........................................................................................................................

14.புள்ளிக்கோட்டில் விடையைஎழுதுக

1. தரப்பட்டுள்ள எண்ணை எழுத்துக்களில் எழுதுக

5067 ..........................................................................

2. தரப்பட்டுள்ள உரோமன் எண்ணிற்கு அடுத்துவரும் உரோமன் எண்ணை எழுதுக.

XIX ..........................................................................

3. தரப்பட்டுள்ள எண் கோலத்திற்கேற்ப அடுத்துவரும் எண்ணை எழுதுக

145, 135, 125,115

..........................................................................................................................

4. தரப்பட்டுள்ள உருவில் $\frac{2}{4}$ஐ நிழற்றுக

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |

# சிரியாவின் இராணுவ முகாம்களின் மீது இஸ்ரேல் விமானங்கள் குண்டு வீச்சு

டமாஸ்கஸ்,பெப்.12

சிரியாவில் உள்ள ஈரான் மற்றும் சிரியா நாட்டு இராணுவத்தைச் சேர்ந்த 12 முகாம்களின் மீது நேற்று இஸ்ரேல் போர் விமானங்கள் ஆவேசமான தாக்குதல்களை நடத்தின.

சிரியாவில் இருந்து அனுப்பப்பட்ட ஈரான் நாட்டுக்குச் சொந்தமான ஆளில்லா விமானத்தை இஸ்ரேல் நாட்டு விமானப்படையினர் நேற்றுமுன்தினம் சுட்டு வீழ்த்தினர். இதற்குப் பதிலடியாக சிரியாவில் உள்ள ஈரான் இராணுவ தளங்களின் மீது இஸ்ரேல் போர் விமானங்கள் குண்டு வீசித் தாக்குதல் நடத்தின.

தங்கள் நாட்டில் இராணுவ நிலைகளின்மீது தாக்குதல் நடத்த வந்த இஸ்ரேல் நாட்டு போர் விமானங்களில் ஒன்றை சுட்டு வீழ்த்தியதாக சிரியா அரசு அறிவித்துள்ளது.

அதேவேளையில், சிரியாவில் உள்ள ஈரான் மற்றும் சிரிய நாட்டு இராணுவத்தைச் சேர்ந்த 12 முகாம்களின் மீது இஸ்ரேல் போர் விமானங்கள் வான்வழித் தாக்குதல்களை நடத்தின என இஸ்ரேல் தெரிவித்துள்ளது. (ப)



## ஹொங்கொங்கில் இரட்டை அடுக்கு பஸ் கவிழ்ந்த விபத்தில் 18 பேர் பரிதாபச் சாவு



சீனாவின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள ஹொங்கொங்கில் இரட்டை அடுக்கு பஸ் கவிழ்ந்த விபத்தில் சிக்கி 3 பெண்கள் உட்பட 18 பேர் பலியாகினர்.

சீனாவின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள ஹொங் கொங்கின் தை போ நகரில் வேகமாகச் சென்று கொண்டிருந்த இரட்டை அடுக்கு பஸ் ஒன்று ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்தது. இதனால் அந்த பஸ் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இதில் பயணம் செய்தவர்களில் 18 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். அவர்களில் 15 பேர் ஆண்கள், 3 பேர் பெண்கள் எனக் கூறப்பட்டுள்ளது.

மேலும், விபத்தில் 50 பேர் காயமடைந்துள்ளனர். அவர்கள் அருகில் உள்ள மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். 19 பேர் தீவிர நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ப)

## இந்தோனேஸியாவில் பஸ் கவிழ்ந்து விபத்து




ஜகார்த்தா,பெப்.12

இந்தோனேசியாவின் ஜாவா தீவுகளில் சுற்றுலாப்பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ் விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 27 பேர் பலியாகினர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தோனேசியாவின் ஜாவா தீவில் உள்ள சுபாங் பகுதியில் உள்ள மலைப் பகுதியை சுற்றிப் பார்ப்பதற்காக சுமார் 40 பேர் கொண்ட ஒரு குழுவினர் பஸ்ஸில் சென்றுள்ளனர். அந்த பஸ் மலையில் இருந்து இறங்கிக் கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக ஒரு மோட்டார் சைக்கிள் மீது மோதியுள்ளது.

இதனால் ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் அதில் பயணம் செய்த 27 பேர் உயிரிழந்துள்ளனர் என முதல் கட்ட தகவல்கள் வெளியாகியுள்ளன.

## குளிர்கால ஒலிம்பிக் நடக்கும் தென்கொரியாவில் நிலநடுக்கம்

சியோல்,பெப்.12

தென்கொரியாவின் பியாங்சங் நகரில் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது.

தென்கொரியாவின் பியாங்சங் நகரில் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில், பியாங்சங் நகரில் இருந்து தெற்குப் பகுதியில் 80 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் 4.7 ரிச்டர் அளவில் நேற்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

மிதமான நிலநடுக்கம் என்பதால் எந்தச் சேதமும் ஏற்படவில்லை என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும், மக்கள் பீதியடைந்துள்ளனர் எனக் கூறப்படுகிறது. பியாங்சங் நகரில் எவ்வித அதிர்வும் உணரப்படவில்லை என ஒலிம்பிக் அதிகாரிகள் வட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## ஐ.நா. அமைதிப்படை தலைவராக முதல் முறையாகப் பெண் தேர்வு!



நியூயோர்க்,பெப்.12

ஐ.நா. சார்பில் சூடான் நாட்டுக்கு அனுப்பப்பட்ட அமைதிப்படைக் குழுவின் தலைவராக முதல்முறையாக பிரிட்டனைச் சேர்ந்த பெண் லெப்டினன் கேணலான கேட்டி ஹிஸ்லோப் பொறுப்பேற்றுள்ளார்.

உலகில் போர் பதற்றம் அதிகம் உள்ள பகுதிகளிலும், கலவரங்கள் அதிகம் நிகழக்கூடிய பகுதிகளுக்கும் ஐ.நா. அமைதிப்படையினர் அனுப்பி வைக்கப்படுவார்கள். இந்த அமைதிப்படையில் பல நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் இருப்பார்கள். அவர்கள் ஒன்றாக இணைந்து பாதுகாப்புப் பணியில் ஈடுபடுவதோடு, அப்பகுதிகளில் வளர்ச்சிப் பணிகளிலும் ஈடுபடுவார்கள்.


இந்த நிலையில், கலவரம் அதிக அளவில் நிகழக்கூடிய சூடானின் தெற்கு பகுதிக்குச் சமீபத்தில் ஒரு ஐ.நா. அமைதிப்படை குழு அனுப்பப்பட்டது. அந்தக் குழுவில் பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் உள்ளனர். அந்தக் குழுவின் தலைவராக பிரிட்டன் நாட்டைச் சேர்ந்த பெண் கேட்டி ஹிஸ்லோப் பொறுப்பேற்றுள்ளார். ஐ.நா. அமைதிப்படையின் தலைவராக ஒரு பெண் பொறுப்பேற்பது இதுவே முதல் முறையாகும். (ப)

## லிபியா மசூதியில் குண்டுத் தாக்கு: ஒருவர் சாவு; 129 பேர் படுகாயம்

பெங்காசி,பெப்.12

லிபியாவில் திரிபோலி நகரில் இருந்து 620 மைல் தொலைவில் அமைந்து உள்ள நகரம், பெங்காசி. அங்கு உள்ள ஒரு மசூதியில் கடந்த வெள்ளிக்கிழமையை யொட்டி வழக்கமான தொழுகை நடைபெற்றது.

மசூதியில் அப்போது அடுத்தடுத்து 2 குண்டுகள் வெடித்தன. இந்தக் குண்டுவெடிப்பால் அந்த மசூதிக்குப் பலத்த சேதம் ஏற்பட்டது.



இந்தக் குண்டுவெடிப்பில் ஒருவர் பலியானார். 129 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர்.

இந்தஇரட்டைக்குண்டுவெடிப்புக்கு எந்த ஒரு பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. (ப)

## ரேடர் மூலம் கண்டறிய முடியாத விமானம் சீனக் கடற்படையில்

பீஜிங்,பெப்.12

ரேடர் மூலம் கண்டறிய முடியாத அதி நவீன போர் விமானத்தை தங்கள் நாட்டு விமானப்படையில் சீனா இணைத்துக்கொண்டுள்ளது.

இந்தியாவுக்கு போட்டி நாடாக விளங்கும் சீனா, உலக அளவில் பொருளாதார ரீதியிலும் படை வலிமையிலும் தன்னை வலுப்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தி வருகிறது. அந்த வகையில், ரேடரால் கண்டுபிடிக்க முடியாத தொழில் நுட்பம் கொண்ட, அதி நவீன ஜே-20 ரக விமானங்களை சீனா தனது



விமானப் படைச் சேவையில் சேர்த்துக் கொண்டுள்ளது. முற்றிலும், உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட இந்த விமானத்தை இணைத்துக் கொண்டதன் மூலம், பிராந்திய வான்வெளியில் தனது முன்னணி ஆதிக்கத்தை நிலைநாட்டியுள்ளது எனச் சீன அரசுச் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

உலக அளவில், அமெரிக்கா மட்டுமே இந்தத் தொழில்நுட்பம் வாய்ந்த விமானங்களை படைச் சேவைக்குப் பயன்படுத்தி வரும் நிலையில், தற்போது சீனாவின் ஜே – 20 விமானங்களும் படைகளில் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதன் மூலம், இந்தியாவுக்கும், சீனாவுக்கும் இடையிலான வான்வெளிப் படைப் பலச் சமநிலை பாதிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

# பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா போர் தொடுப்பதற்கு அதிக வாய்ப்பு


லூதியானா,பெப்.12

தீவிரவாதிகளை அனுப்புவதை நிறுத்தாவிட்டால் பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா போர் தொடுக்க அதிக வாய்ப்புள்ளது என்று காஷ்மீர் முன்னாள் முதல்வர் பரூக் அப்துல்லா கூறியுள்ளார்.

தேசிய மாநாட்டு கட்சித் தலைவரும், காஷ்மீர் முதலமைச்சருமான பரூக் அப்துல்லா பஞ்சாப்பில் உள்ள லூதியானாவில் கூறியவை வருமாறு:-

காஷ்மீரில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தாத நாளே இல்லை. பாகிஸ்தானில் இருந்து தீவிரவாதிகள் அனைவரும் வருகிறார்கள்.

தீவிரவாதிகளை அனுப்புவதை பாகிஸ்தான் கண்டிப்பாக நிறுத்தி விட்டு இந்தியாவுடனான உறவை மேம்படுத்த வேண்டும்.



பரூக் அப்துல்லா

இந்தியாவுடன் அமைதியைப் பேண பாகிஸ்தான் விரும்பினால் பயங்கரவாதத்தைக் கைவிட வேண்டும். இல்லையென்றால் பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா போர் தொடுக்க வாய்ப்பு உள்ளது. அப்படி போர் நடந்தால் இரு நாடுகளுமே அழிவைச் சந்திக்க வேண்டி இருக்கும். இதனால் தீவிரவாதத்தை ஆதரிப்பதை நிறுத்திவிட்டு பேச்சு முயற்சியை பாகிஸ்தான் தொடங்க வேண்டும்.

இந்தியா- பாகிஸ்தான் இடையே உள்ள அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காண ஒரேவழி பேச்சுத்தான். எந்தப் பிரச்சினைக்கும் போர் தீர்வாகாது என்று தெரிவித்துள்ளார்.

ஜெய்ஷ்-இ-முகமது தீவிரவாதிகள் காஷ்மீரில் இராணுவ முகாம் மீது தாக்குதல் நடத்தி இருந்த நிலையில் பரூக் அப்துல்லா இதைத்தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## நாடாளுமன்றத்துக்கு முன்கூட்டியே தேர்தல் நடத்த பா.ஜ.க. தீவிரம்



புதுடில்லி,பெப்.12

2019ஆம் ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலை முன்கூட்டியே நடத்த பாரதிய ஜனதா தீவிரம் காட்டி வருகின்றது எனத் தகவல் வெளியாகி உள்ளது.

2014ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் பா.ஜனதா அமோக வெற்றி பெற்று நரேந்திர மோடி பிரதமர் ஆனார். அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் 2019ஆம் ஆண்டு மே மாதம் நடத்தப்படும்.

ஆனால் பா.ஜனதா முன்கூட்டியே நாடாளுமன்றத் தேர்தலை நடத்தத் திட்டமிட்டுள்ளது. அந்தக் கட்சியின் தேசியத் தலைவர் அமித்ஷா இதை ஏற்கனவே மறைமுகமாகத் தெரிவித்து இருந்தார்.

இந்த நிலையில் பொதுத் தேர்தலுக்கு தயாராக இருக்குமாறு மாநில அமைப்புகளுக்கு பா.ஜனதா மேலிடம் உத்தரவிட்டுள்ளது. எந்த வித காலதாமதமும் இல்லாமல் தேர்தல் பணிகளில் ஈடுபடுமாறு அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டில்லியில் கட்சியை வலுப்படுத்தவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அரசின் சாதனைகளை விளக்கும் பணிகளிலும் ஈடுபட தயாராக இருக்குமாறும் கேட்டுகொள்ளப்பட்டுள்ளது.

இதன்மூலம் பா.ஜனதா முன்கூட்டியே நாடாளுமன்றத் தேர்தலை நடத்தத் தீவிரம் காட்டி வருவது தெரிய வந்துள்ளது. பிரதமர் நரேந்திர மோடி சுதந்திர தின உரையில் முன்கூட்டியே தேர்தல் வரஇருக்கும்அறிவிப்பை வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும் நாடாளுமன்றத் தேர்தலுக்குத் தயாராக இருக்குமாறு கட்சி எம்.பி.க்களிடம் சமீபத்தில் கட்டளையிட்டு இருந்தார். முன் கூட்டியே தேர்தல் வர வாய்ப்பு இருப்பதை அறிந்தே அவரும் இதை தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ராணுவ முகாம் மீது தாக்குதல்; அதிகாரிகள் மூவர் சாவு



காஷ்மீரின் சஞ்சுவான் இராணுவ முகாமுக்குள் தீவிரவாதிகள் நுழைந்து தாக்குதல் நடத்தியதில் நேற்றுமுன்தினம் 2 அதிகாரிகள் பலியான நிலையில், நேற்று மேலும் 3 இராணுவ அதிகாரிகள் உயிரிழந்துள்ளனர்.

ஜம்மு நகரின் புறநகர்ப் பகுதியான கெண்னி என்ற இடத்தில் சஞ்சுவான் இராணுவ முகாம் உள்ளது. அங்கு நேற்று முன்தினம் அதிகாலையில் அத்துமீறி நுழைந்த தீவிரவாதிகள் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இந்த தாக்குதலில் 2 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். மேலும் இராணுவ அதிகாரியின் மகள் உள்ளிட்ட 4 பேர் காயமடைந்தனர்.

இந்த நிலையில், மேலும், 3 இராணுவ அதிகாரிகள் தாக்குதலில் பலியாகியுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும், ஒரு சிவிலியன் உள்பட இதுவரை மொத்தம் 6 பேர் தீவிரவாதிகள் தாக்குதலில் உயிரிழந்துள்ளனர்.

## ரஜனியுடன் கூட்டணி அமைக்க வாய்ப்பு இல்லை – கமலஹாசன்



அமெரிக்காவில் உள்ள ஹவாட் பல்கலைகழகத்தின் பிஸ்னஸ் ஸ்கூல் ஒவ் நிகழ்ச்சியில் நடிகர் கமல் கலந்துகொண்டார்.

இந்தியா தொடர்பான கருத்தரங்கில் தமிழரின் பாரம்பரிய உடையான வேட்டி சட்டை அணிந்து பங்கேற்றார். தமிழில் வணக்கம் எனக்கூறிப் பேச்சைத் தொடங்கிய அவர், நாளை நமதே எனக்கூறி தனது உரையை நிறைவு செய்தார். அப்போது பேசிய அவர்,

அரசியலுக்கு வரவேண்டிய கட்டாயம் வந்துவிட்டது. கிராமத்தில் இருந்து மாற்றத்தைத் தொடங்குவேன். குறிப்பிட்ட இந்த மாற்றத்திற்கு அனைவரின் பங்களிப்பு அவசியம் . நானும் ரஜனியும் நண்பர்களாக இருக்கலாம் ஆனால் இருவரின் பாதைகள் வேறு என்பதால் கூட்டணி அமைத்துச் செயற்பட வாய்ப்பு இல்லை .

கடந்த 37 ஆண்டுகளாக நான் அரசியலைப் படித்து வருகிறேன். காந்தி, பெரியார் போல நேரடி அரசியலில் ஈடுபட வேண்டாம் எனநினைத்திருந்தேன். ஆனால், தற்போது நேரடி அரசியலில் ஈடுபட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என நினைக்கிறேன்.

எனது கட்சி தனி மனிதக் கட்சி அல்ல. 2, 3, 4ஆவது கட்டத் தலைவர்களும் இருப்பார்கள். தமிழன் என்பது முகவரி தான், தகுதி அல்ல எனப் பேசினார்.

## சட்டபையில் ஜெயலலிதா படம் திறப்பதற்கு விஜயகாந்த் எதிர்ப்பு



தமிழக சட்டசபையில், மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவின் படம் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது. இதனை முதலமைச்சர் பழனிச்சாமி திறந்து வைக்கிறார். இந்த நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் மற்றும் சபாநாயகர் தனபால் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

இந்த நிலையில் சட்டப்பேரவையில் ஜெயலலிதா படம் திறப்பதற்கு தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். அவர் செய்தியாளர்களிடம் பேசும்பொழுது, சொத்துக் குவிப்பு வழக்கில் முதல் குற்றவாளி ஜெயலலிதா என்பது கவனிக்கப்பட வேண்டியது. அதனால் சட்டசபையில் ஜெயலலிதா படம் திறக்கக் கூடாது எனக் கூறியுள்ளார்.

தொடர்ந்து அவர், உள்ளாட்சித் தேர்தலைச் சந்திக்கத் தயாராக உள்ளோம். தமிழகத்தில் பாரதிய ஜனதா கட்சியால் கால், கையை ஊன்ற முடியாது என்று கூறியுள்ளார்.

(ப)

# ‘நாளை நமதே’ என மாறிய ‘மய்யம்’ இணையத்தளம்


சென்னை,பெப்.12

நடிகர் கமலஹாசன் ‘மய்யம்’ என்ற பெயரில் தொடங்கிய இணையத்தளத்தின் பெயரை தற்போது ‘நாளை நமதே’ என மாற்றம் செய்துள்ளார்.

அரசியலில் களமிறங்க முடிவெடுத்துள்ள நடிகர் கமலஹாசன் வரும் 27ஆம் திகதி ராமேஸ்வரத்தில் இருந்து தனது சுற்றுப்பயணத்தை ஆரம்பிக்கவுள்ளார். கட்சியின் பெயர், கொடி மற்றும் நிர்வாகிகள் விவரத்தை அன்று தெரிவிக்க உள்ளேன் என முன்னர் கூறியிருந்தார்.

இதற்காகக், கடந்த ஆண்டு இறுதியில் மய்யம் என்ற பெயரில் செயலி மற்றும் இணையத்தளத்தை அவர் தொடங்கினார். தனது ரசிகர்களை ஒருங்கிணைக்கும் விதமாகவும், தமிழகத்தில் உள்ள பிரச்சினைகளை அறிந்து கொள்ளும் விதமாகவும் அந்த இணையத்தளம் இருந்தது.

இந்த நிலையில், தற்போது ‘மய்யம்’ என்ற பெயரில் இருந்த இணையத்தளம் ‘நாளை நமதே’ எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இப்புதிய இணையத்தளத்தில் கல்வி, தொழில், சுற்றுச்சூழல், நீர் மேலாண்மை, நிதி உள்ளிட்ட துறைகளில் கருத்துகள், மேம்பாட்டு திட்டங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்யலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



### 4ஆவது ஒருநாள் போட்டி:

# மழை கைகொடுக்க இந்தியாவை வீழ்த்தியது தென்னாபிரிக்க அணி





தென்னாபிரிக்கா மற்றும் இந்திய அணிகளுக்கு இடையிலான 4ஆவது ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இந்தியாவை வீழ்த்தியது.

இந்தியா - தென்னாபிரிக்கா இடையிலான 4ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி ஜோகன்னஸ்பர்க் வாண்டரர்ஸ் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்திய அணிக் கப்டன் விராட் கோஹ்லி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார். தொடக்க ஆட்டக்காரர்களாக



ரோகித் சர்மாவும், ஷிகர் தவானும் களமிறங்கினர். ரோகித் சர்மா 5 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ரபாடா பந்தில் ஆட்டமிழந்தார். அதன்பின் கோஹ்லி களமிறங்கினார். தவான், கோஹ்லி இருவரும் அரைச்சதம் கடந்தனர்.

இடையில் மழையின் காரணமாக ஆட்டம் பாதியில் நிறுத்தப்பட்டது. பின்னர் போட்டி தொடங்கிய சிறிது நேரத்தில் கோஹ்லி ஆட்டமிழந்தார். அவர் 83 பந்துகளில் 75 ஓட்டங்கள் எடுத்தார்.

கோஹ்லி, தவான் ஜோடி இரண்டாவது விக்கெட்டுக்கு 158 ஓட்டங்கள் சேர்த்தது. சிறப்பாக விளையாடிய தவான் சதம் அடித்தார். இது அவரது 13ஆவது சதமாகும்.

அவரைத் தொடர்ந்து ரகானே களமிறங்கினார். சதமடித்த தவான் 109 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அவர் 11 பவுண்ரிகளும், இரண்டு சிக்ஸர்களும் அடித்திருந்தார். அவரைத்தொடர்ந்து ரகானேவும் 8 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அதன்பின் டோனி மட்டும் ஓரளவு விளையாடினார்.

இதனால் இந்திய அணி 50 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 289 ஓட்டங்கள் எடுத்தது. டோனி 42 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார். தென்னாபிரிக்கா அணி பந்துவீச்சில் ரபாடா, நிகிடி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளும், மோர்னிமோர்கல், கிறிஸ் மோரிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, 290 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு தென்னாபிரிக்கா அணி களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர்களாக மெக்ரமும் அம்லாவும் களமிறங்கினர். இருவரும் தொடக்கத்தில் இருந்தே அடித்து ஆடினர். அணியின் எண்ணிக்கை 42 ஆக இருந்த போது, மெர்க்ரம் பும்ரா பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். அப்போது இடியுடன் கூடிய மழை பெய்ததால் ஆட்டம் நிறுத்தப்பட்டது.

அதன்பின், சுமார் ஒன்றரை மணி நேரத்துக்குப் பிறகு ஆட்டம் தொடங்கியது. தென்னாபிரிக்கா 28 ஓவர்களில் 202 ஓட்டங்கள் என இலக்கு மாற்றியமைக்கப்பட்டது.

இறுதியில் தென்னாபிரிக்க அணி 25.3 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 207 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

இந்திய அணி தரப்பில் குல்தீப் யாதவ் 2 விக்கெட்டுகளும், பும்ரா, பண்டையா, சாஹல் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

ஆட்ட நாயகன் விருதை கிளாசன் பெற்றார். நூறாவது போட்டியில் சதமடித்த ஷிகர் தவானின் ஆட்டம் வீணானதே என ரசிகர்கள் வேதனையில் ஆழ்ந்தனர்.

இந்த ஆட்டத்தில் தோற்றாலும் இந்திய அணி 3:1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது. இரு அணிகளுக்கும் இடையிலான அடுத்த போட்டி 13 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

### ரி - 20 முத்தரப்பு தொடர்:

# இங்கிலாந்தை மீண்டும் ஓடவிட்ட ஆஸ்திரேலியா



மெல்பேர்னில் நடைபெற்ற ரி-20 போட்டியில் இங்கிலாந்தை 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி ஆஸ்திரேலியா இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

ரி-20 முத்தரப்பு தொடரின் 3ஆவது ஆட்டம் மெல்பேர்ன் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் ஆஸ்திரேலியா-இங்கிலாந்து அணிகள் மீண்டும் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற ஆஸ்திரேலியா களத்தடுப்பைத் தேர்வு செய்தது. அதன்படி முதலில் களம் இறங்கிய இங்கிலாந்து 20 ஓவர் முடிவில் 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 137 ஓட்டங்கள் சேர்த்தது.

பின்னர் 138 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் கண்ட ஆஸ்திரேலியா 14.3 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 138 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

ஏற்கனவே நியூசிலாந்து, இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் வெற்றி பெற்றிருந்ததால் மூன்று வெற்றிகளுடன் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது. ஆஸ்திரேலியா தனது கடைசி லீக் ஆட்டத்தில் நியூசிலாந்தை வருகிற 16ஆம் திகதி எதிர்கொள்ளவுள்ளது. இந்தப் போட்டி அக்லாந்தில் இடம்பெறவுள்ளது.

நியூசிலாந்து- இங்கிலாந்து இடையிலான முதல் லீக் வெலிங்டனில் 13 ஆம் திகதியும், 2ஆவது லீக் ஆட்டம் ஹமில்டனில் 18ஆம் திகதியும் இடம் பெறவுள்ளது.

# ஐஸ் ஹொக்கியில் சுவீடன் அணியிடம் இணைந்த கொரிய அணி படுதோல்வி

குளிர்கால ஒலிம்பிக்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐஸ் ஹொக்கிப் போட்டியில் சுவீடன் அணியிடம் இருநாட்டு வீராங்கனைகள் இணைந்த கொரிய அணி படுதோல்வி அடைந்தது.

23ஆவது குளிர்கால ஒலிம்பிக் போட்டி தென்கொரியாவில் உள்ள பியாங்சாங் நகரில் இடம்பெறுகின்றது. இதில் 92 நாடுகளை சேர்ந்த 2ஆயிரத்து 952 வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற மகளிர் ஐஸ் ஹொக்கிப் போட்டியில் வட கொரியா மற்றும் தென் கொரியா ஆகியவை இணைந்த கொரியா அணியுடன் சுவீடன் அணி மோதியது.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே சுவீடன் அணி ஆதிக்கம் செலுத்தியது. இதனால் சுவீடன் அணி 8 கோல்கள் அடித்து கொரிய அணியை எளிதில் வீழ்த்தியது

தொடர்ந்து ஏவுகணைச் சோதனை நடத்தி வரும் வட கொரியாவுக்கு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்து வருகிறது. இந்த நிலையில், குளிர்கால ஒலிம்பிக் போட்டியில் வட கொரியா மற்றும் தென் கொரியா அணிகள் இணைந்து ஒரே அணியாக களமிறங்கியது வரலாற்று சாதனையாகக் கருதப்படுகிறது.

வரலாற்று சாதனையாகக் கருதப்படும் இந்தப் போட்டியில், கொரிய அணி படுதோல்வி அடைந்தமை குறிப்பிடத்தக்கது.







# சுவீடன் வீராங்கனைக்கு முதல் தங்கப்பதக்கம்

23ஆவது குளிர்கால ஒலிம்பிக் போட்டி தென் கொரியாவில் உள்ள பியாங்சாங்கில் தொடங்கியது. இதில் 92 நாடுகளை சேர்ந்த 2ஆயிரத்து 952 வீர, வீராங்கனைகள் பங்கேற்றுள்ளனர். இந்தப் போட்டியில், முதல் தங்கப்பதக்கத்தை சுவீடன் வீராங்கனை சார்லோட் கல்லா தட்டிச்சென்றார்.

பெண்களுக்கான ஸ்கியத்லான் என்ற ஒரு வகைப் பனிச்சறுக்குப் பந்தயம் நேற்றுமுன்தினம் நடந்தது. இதில் சீறிப்பாய்ந்த சார்லோட் கல்லா 15 கிலோ மீற்றர் பந்தய தூரத்தை 40 நிமிடம் 44.9 வினாடிகளில் கடந்து முதலிடத்தைப் பிடித்தார். 30 வயதான சார்லோட், ஏற்கனவே குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் 2 தங்கம் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. அவரை விட 7.8 வினாடி பின்தங்கிய நடப்புச் சம்பியன் மரிட் ஜோர்ஜென் (நோர்வே) வெள்ளிப்பதக்கமும், கிறிஸ்டா பர்மாகோவ்ஸ்கி (பின்லாந்து) வெண்கலப்பதக்கமும் பெற்றனர். (ப)

## துரோகத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக நேற்று மாலை 5 மணியளவில் யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

எமக்கு வாக்களித்து மாற்றத்துக்காக ஆணையிட்ட மக்களுக்கும் எம்மோடு இணைந்து களமாடிய வேட்பாளர்களுக்கும் கடந்த எட்டு வருடங்களுக்குப் பின் எங்கள் தரப்பு நியாயங்களையும் உள்ளதை உள்ளபடி தெரிவிக்கச் சந்தர்ப்பமளித்து நடுநிலைத் தன்மையுடன் நடந்துகொண்ட ஊடகங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எம்மைப் பொறுத்தவரை இந்தத் தேர்தல் பெரியதொரு வெற்றியைப் பெற்றுத் தந்திருக்கிறது. மக்கள் மாற்றம் ஒன்றை விரும்புகின்றார்கள் என்பதை இந்தத் தேர்தல் உணர்த்தியிருக்கின்றது.

இந்தத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத தன்மையே பெரும்பாலான சபைகளில் காணப்படுகின்றது. எனினும், தமிழ் மக்களை நடுத்தெருவில் விட்டும், ஒற்றையாட்சி அரசமைப்புக்கு இணங்கியும், அதில் அங்கத்துவம் வகிக்கும் கட்சிகளின் தலைமைகளும், ஒட்டுமொத்தமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகளாக உள்ளவர்களும், கூட்டமைப்பை விட்டு வெளியேறுகின்றபோதே நாம் கூட்டமைப்போடு சேர்ந்து பயணிப்பது தொடர்பில் பரிசீலிக்க முடியும்.

தமிழ் மக்கள் உறுதியாகத் தேசியத்தோடு இருப்பார்கள் என்ற நம்பிக்கை 2009 மே மாதம் 18 ஆம் திகதியில் இருந்து இருந்தது. ஆனால், அந்த நம்பிக்கைக்குத் துரோகமிழைக்கின்ற பல சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்ததையடுத்து அதனைத் தொடர்ந்தும் பார்த்துக்கொண்டிருக்க முடியாது என்ற காரணத்தினாலேயே நாம் 2010 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறியிருந்தோம்.

இவ்வாறான நிலையில் நாம் முன்வைத்த கருத்துக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீதான எரிச்சல் காரணமாகவோ, விரக்தியின் காரணமாகவோ அல்ல. அவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான கொள்கை ரீதியான விமர்சனங்களேயாகும். இவர்கள் தமிழ் மக்களை ஏமாற்றி அவர்களுக்குத் துரோகமிழைத்து ஒற்றையாட்சிக்கு இணங்கி, பௌத்தத்துக்கு முன்னுரிமை கொடுத்து, இலங்கை அரசின் நிகழ்ச்சிநிரலில் செயற்பட்டு வருகின்றார்கள் என்ற அடிப்படையின் காரணமாகவே நாம் முன்வைத்த கருத்துக்கள் கடுமையான தாக இருந்தன.

இதேநேரம் நாம் இன்னுமொரு விடயத்தையும் மிகத் தெளிவாக கூறிவந்துள்ளோம். அதாவது நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கோ அல்லது அதன் பங்காளிக் கட்சிகளுக்கோ எதிராகச் செயற்படுகின்றவர்கள் அல்ல எனவும் அவர்கள் தமிழ் மக்களுக்குச் செய்கின்ற துரோகங்களை மக்கள் மத்தியில் வெளிப்படுத்துகின்றவர்களாகவே இருக்கின்றோம் என்பதையும் மிகத் தெளிவாகக் கூறி வந்துள்ளோம். இந்நிலையில் இன்று தமிழ் மக்கள் மிகப்பெரிய மாற்றத்திற்கு அடித்தளம் ஒன்றைப் போட்டிருக்கின்றார்கள்.

இவ்வாறான நிலையில் தமிழ்த் தேசியப் பேரவையின் கொள்கையை, உண்மையில் அடிப்படைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கையாக இருந்த கொள்கையை ஏற்றுக்கொண்டு நேர்மையான ஊழலற்ற, ஆட்சியை நடத்தி புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்குவதற்கு நாம் ஒன்றாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு இணைந்து செயற்படத் தயாராகவே இருக்கின்றோம்.

ஆனால், அவ்வாறு நாம் இணைந்து செயற்படவேண்டுமாயின் தமிழ் மக்களை ஏமாற்றி அவர்களை நடுத்தெருவுக்குக் கொண்டு வந்துவிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகளும், அவர்களது தீர்மானங்கள் எல்லாவற்றுக்கும் ஆமோதித்து ஏற்றுக் கொண்ட கூட்டமைப்பின் பங்காளி கட்சிகளின் தலைமைகளும் கூட்டமைப்பில் இருந்து வெளியேற்றப்படவேண்டும். அவ்வாறு செய்யப்பட்டால் நாம் கூட்டமைப்போடு இணைந்து செயற்படத் தயார். அதுவரை கூட்டமைப்போடு ஒருமித்துப் பயணிக்க முடியாது.

இந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ளூராட்சி மன்றங்களில் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களில் தூய்மையான அரசியலை உருவாக்க தயாராகவுள்ளவர்கள் எம்மோடு இணைந்து தமிழ்த் தேசியப் பேரவையின் தரப்பாகச் செயற்படத் தயாராக இருந்தால் அவர்களை அரவணைக்க நாம் தயாராகவே இருக்கின்றோம்.

அதேநேரம் கூட்டமைப்பின் கொள்கைகளை விடவும் மிக மோசமான கொள்கைகளை உடைய ஏனைய எந்தக் கட்சிகளுடனும் குறிப்பாக அது ஈ.பி.டி.பி. கட்சியாக இருந்தாலும் நாம் அவர்களோடு சேர்ந்து செயற்படப் போவதில்லை. ஆனால் ஈ.பி.டி.பி. கட்சியின் கொள்கையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கையும் ஒன்றாகவே உள்ள நிலையில் ஈ.பி.டி.பி அதனைப் பகிரங்கமாக கூறுகின்றது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகிரங்கமாக அதனை கூறவில்லை. – என்றார். (ஐ-7)

## நாடாளுமன்றைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு வரும் நடவடிக்கைகளை மக்கள் இன்று நிராகரித்துள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, நாட்டைப் பிளவடையச் செய்தல், நாட்டின் சொத்துக்களை விற்பனை செய்தல், நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழித்தல் போன்றனவற்றுக்கு எதிர்ப்பை வெளியிட்டு மக்கள் வாக்களித்துள்ளனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்கள் ஆணைக்குத் தலைசாய்த்து அரசு நாடாளுமன்றைக் கலைக்கவேண்டுமெனவும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க பதவி விலகவேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார்.

நாடாளுமன்றைக் கலைத்து ஜனாதிபதித் தேர்தலுக்கு அழைப்பு விடுக்கவேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

## மஹிந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

உள்ளூராட்சிச் சபைகள் தேர்தல் முடிவுகள் நேற்றுப் பிற்பகல் வெளியிடப்பட்டன. வடக்கு – கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆதரவு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனை பெரு வெற்றியைப் பெற்றுள்ளது.

ஆட்சியிலிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும் சிங்கள மக்கள் பெரும்பாலானோர் நிராகரித்துள்ளனர்.

அத்துடன், வடக்கு – கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 40 சபைகளில் வெற்றிபெற்ற போதும், ஆட்சி அமைக்கும் அறுதிப் பெரும்பான்மை அந்தக் கட்சிக்குக் கிடைக்கவில்லை.

இந்நிலையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் மேலும் தெரிவித்தவை வருமாறு:

வடக்கு – கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்ட 56 உள்ளூராட்சிச் சபைகளில் 40 சபைகளில் முன்னிலை பெற்றுள்ளது. கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான வாக்கு வீதம் பெருமளவு உயர்ந்துள்ளது.

எனினும், யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான வாக்கு வீதம் பின்னடைவைச் சந்தித்துள்ளது. அது தொடர்பில் வரும் நாள்களில் ஆராய்வோம். அதற்கான காரணங்களைக் கண்டறிந்து தீர்வுகளை எடுப்போம்.

யாழ்ப்பாணத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் முன்னேற்றம் கண்டுள்ளது. அந்தக் கட்சி சாவகச்சேரி மற்றும் பருத்தித்துறை நகர சபைகளில் முன்னிலை பெற்றுள்ளது. அதே போன்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியும் நெடுந்தீவு மற்றும் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைகளில் முன்னிலை பெற்றுள்ளது.

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான இடைக்கால அறிக்கையை நிராகரிக்கக் கோரியே ஏனைய தமிழ்க் கட்சிகள் வடக்கு – கிழக்கு மக்களிடம் வாக்குக் கேட்டார்கள். எனினும், அவர்களின் அந்தக் கருத்தை நாம் நிராகரித்திருந்தோம். தற்போது வெளியாகியுள்ள தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் தமிழ் மக்கள் இடைக்கால அறிக்கை பற்றிய விடயத்தில் தெளிவாக உள்ளனர் என்பது புலப்படுகிறது. ஏனைய தமிழ்க் கட்சிகளால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் பெரிதும் எடுபடவில்லை.

எனினும் மஹிந்த ராஜபக்ஷ, இந்த இடைக்கால அறிக்கை பற்றி தென்னிலங்கையில் முன்வைத்த எச்சரிக்கை பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம். அவரது பெரு வெற்றியின் அடிப்படையில் இதனைக் கூறுகின்றோம். எனவே புதிய அரசமைப்பை உருவாக்கும் பணி தற்போது பின்னடைவைச் சந்தித்துள்ளது என்றே கருதுகின்றோம். – என்றார். (ஐ – 7)

## ஆட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த ராஜபக்ஷ அணியினர், மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக்கும் முயற்சியில் களமிறங்கவுள்ள நிலையிலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதுவரை வெளியான உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் முடிவுகளுக்கு அமைய, 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று 150க்கும் அதிகமான சபைகளைக் கைப்பற்றி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முன்னிலை வகிக்கின்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சுதந்திரக் கட்சியின் வாக்கு வங்கியில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ள நிலையில் சுதந்திரக் கட்சி அமைச்சர்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று ஞாயிற்றுக்கிழமை பகல் அவசரமாக அழைத்து கலந்துரையாடலை நடத்தினார்.

கொழும்பிலுள்ள ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றதோடு, சிறந்த முடிவொன்றை எடுப்பதற்குச் சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் ஜனாதிபதிக்கு காலக்கெடுவை விதித்திருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பு முடிந்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன –

நாட்டிலுள்ள நிலைவரம் தொடர்பாக நாங்கள் இன்று (நேற்று) கலந்துரையாடினோம். எமக்குக் கருத்து கூறுவதற்கு ஜனாதிபதி சந்தர்ப்பம் அளித்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் நடவடிக்கைகளுக்கு எதிராகவே மக்கள் இம்முறை வாக்களித்திருக்கின்றனர் என நாங்கள் எடுத்துக்கூறினோம். இதன்படி விரைவான மாற்றமொன்றை நாட்டில் செய்வார் என ஜனாதிபதி உறுதியளித்தார்.

எவ்வகையான மாற்றம் என எங்களால் கூறமுடியாது. நாங்கள் ஒரு கால எல்லையை வழங்கினோம். இதன்படி குறித்த காலப் பகுதிக்குள் ஆட்சி முறையில் மாற்றமொன்றை ஜனாதிபதி ஏற்படுத்துவார். இத்தேர்தலில் அரசுக்கு எதிராக மக்கள் வாக்களித்துள்ளனர். எனவே சுதந்திரக் கட்சி தொடர்ந்தும் பயணத்தை முன்கொண்டு செல்லுமா என்பது குறித்து யோசனை செய்வதற்கு ஜனாதிபதிக்கு காலம் வழங்கினோம் என்றார்.

இதேவேளை ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, அனைத்துக் கட்சிகளுடனும் கலந்துரையாடிய பின்னர் மக்கள் எதிர்பார்க்கும் ஒரு முடிவை ஜனாதிபதி எடுப்பார் என்று நம்பிக்கை வெளியிட்டார்.

அரசமைப்பின்படி அதிகாரங்கள் பயன்படுத்தவும், ஏனைய கட்சிகளுடன் பேச்சு நடத்தவும் ஜனாதிபதிக்கு உரிமை இருக்கிறது. பேச்சுக்களை நடத்திய பின்னர் நாட்டிற்கு உணரக்கூடிய மாற்றமொன்றை செய்வார் என ஜனாதிபதி உறுதியளித்தார். அது எவ்வகையான மாற்றம் என்பதை இன்னும் சில தினங்களில் மக்களுக்கு அறிந்து கொள்ள முடியும்.

ஒன்றாக இருந்தவர்கள்தான் இத்தேர்தலில் பிரிந்து கிராமப் பகுதிகளில் தனித்துப் போட்டியிட்டார்கள். அரசியல் முடிவுகளை எடுக்கின்றபோது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முன்னணியில் இருப்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆகவே அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சு நடத்தி மக்கள் உணரக்கூடிய சிறந்த முடிவொன்றை ஜனாதிபதி எடுப்பார் – என்று தெரிவித்தார். (ஐ)

## கொழும்புக்கு மேயராக முதலாவது பெண் ரோஸி

கொழும்பு, பெப். 12

கொழும்பு மாநகரசபையை தனது ஆளுகைக்குள் வைத்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி, இம்முறையும் 131,353 வாக்குகளைப் பெற்று 60 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.

அதன் பிரகாரம் ஐ.தே.க. சார்பில் கொழும்பு மாநகர சபையில் போட்டியிட்ட ரோஸி சேனாநாயக்க, கொழும்பு மாநகர சபை வரலாற்றில் முதல் பெண் மேயராக தெரிவு செய்யப்படவுள்ளார் எனக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அத்தோடு, பொதுஜன பெரமுன 60,087 வாக்குகளைப் பெற்று 23 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 31,421 வாக்குகளைப் பெற்று 12 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. (ஐ)

## ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர் ரணில் விக்ரமசிங்கவுக்கு அவர் அவர் அனுப்பியுள்ளார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் ஒரு நிபந்தனையின் கீழ்தான் இராஜினாமா செய்கிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதாவது ஐக்கிய தேசியக் கட்சியின் மற்றைய பதவிகளில் இருக்கும் ஏனையவர்களும் இந்தத் தேர்தல் தோல்விக்குப் பொறுப்பேற்று இராஜினாமா செய்தால் மாத்திரமே தனது இராஜினாமா செல்லுபடியாகும் என்ற நிபந்தனையையே அவர் முன்வைத்துள்ளார்.

## அரசில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் கலந்து கொண்ட விசேட மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்றது. இதன்போதே ஜனாதிபதி இந்த விடயத்தைக் குறிப்பிட்டார் என அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த மற்றும் மஹிந்த அமரவீர ஆகியோர் தெரிவித்தனர்.

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் மற்றும் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாகவும் ஜனாதிபதி இதன்போது நீண்ட நேரம் கலந்துரையாடினார் எனவும் அமைச்சர்கள் தெரிவித்தனர். (ஐ)

## ஆளும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றமையை அடுத்து –

கூட்டு இணைந்து 'நல்லாட்சி அரசு' அமைத்திருக்கும் ஐ.தே. கட்சி மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளிலும் உள்வீட்டுக் குழப்பங்கள் தீவிரமடைந்திருக்கின்றன என்று கொழும்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

சுதந்திரக் கட்சியின் தலைமை மீண்டும் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்துவிட்டு தமது ஜனாதிபதி பதவியை மட்டும் தொடரும்படி சு.க. தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, அவருக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்துள்ளனர் சு.க வினர் கோரியுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேபோல, ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகவும் அக்கட்சியினர் கிளர்ந்தெழுந்துள்ளனர் என்றும் –

கடும் உட்கட்சி அழுத்தத்தை எதிர்கொள்ளும் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் என்ற முறையில் அரசுத் தலைமையைத் தக்க வைத்தல் மட்டுமே கட்சியின் தலைவராகவும் நீடிக்க முடியும் என விடயமறிந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ)

# ஐக்கிய அரபு இராஜ்யம் – இலங்கை 135 கோடி ரூபா வர்த்தக நடவடிக்கை!

கொழும்பு, பெப். 12

ஐக்கிய அரபு இராஜ்யத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான வர்த்தக நடவடிக்கைகள் தற்போது 135 கோடி ரூபா அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது என டுபாய் மற்றும் கிழக்கு ஐக்கிய அரபு இராஜ்யத்திற்கான கன்சல்ட் ஜெனரல் தெரிவித்துள்ளார்.

70 வது சுதந்திர தினத்தை முன்னிட்டும் டுபாய் மற்றும் கிழக்கு ஐக்கிய அரபு இராஜ்யத்திற்கும் இலங்கைக்கும் இடையில் கன்சல்ட் ஜெனரல் இராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட்டு 25 வருட நிறைவை குறிக்கும் வகையிலும் இந்த வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டது.




டுபாயிலுள்ள ஹோட்டல் ஒன்றில் இந்த வைபவம் நடைபெற்றது.

இலங்கைக்கான கன்சால்ட் ஜெனரல் டுபாய் மற்றும் கிழக்கு ஐக்கிய அரபு இராஜியத்திற்கான ஜெனரல் சரித ஜட்ட கொட உரையாற்றுகையில், இலங்கை ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியில் முன்னெடுத்து வரும் செயற்பாடுகளை விவரித்துள்ளார்.(க)

## தெளிவான செய்தியை நாட்டு மக்கள் தேர்தலில் கூறிவிட்டனர்!

கொழும்பு, பெப். 12

தெளிவானசெய்தியை மக்கள்வெளியிட்டுள்ளனர் என முன்னாள் பாதுகாப்புச்செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ தற்போது அமெரிக்காவிற்கு பயணம் செய்துள்ள நிலையில் அங்கிருந்து தேர்தல் வெற்றி பற்றி கருத்து வெளியிட்டுள்ளார்.

2020ம் ஆண்டு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக கோட்டாபய ராஜபக்ஷவே கருதப்படுகின்ற நிலையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மக்களை தொடர்ந்தும் முட்டாளாக்க முடியாது என குறிப்பிட்டுள்ள அவர் தாய் நாட்டின் நலனுக்காக தைரியமாக வாக்களித்த அனைவருக்காகவும் நன்றி பாராட்டுவதாகத் தெரிவித்துள்ளார்.



கோட்டாபய தெரிவிப்பு

# கடந்த வருடத்தில் மட்டும் விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக 1,356 கோடி ரூபா!

கடந்த பெரும்போக பயிர்ச் செய்கைக்கு உரமானியம், மற்றும் பயிர்களுக்கு ஏற்பட்ட சேதத்திற்காக 1,365 கோடி ரூபா இழப்பீடு செலுத்தப்பட்டுள்ளது என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

15 லட்சம் விவசாயிகளுக்கு இந்த இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது என்றும் விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது. 2017ஆம் ஆண்டில் பெரும்போக உரமானியமாக 84 லட்சத்து 226 ரூபா செலுத்தப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக விவசாய மற்றும் விவசாய காப்புறுதி சபை மூலம் 2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 520 கோடி ரூபா நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்திலும் இந்த வேலைத்திட்டத்தின் கீழ் உர மானியம் மற்றும் உற்பத்திகளுக்கான இழப்பீட்டுத்தொகை தொடர்ந்தும் வழங்கப்படும் என்று விவசாய அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.



## தேர்தல் விதியை மீறிய 202 பேர் கைது!



உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் நேற்று முன்தினம் காலை 6 மணி முதல் நேற்று வரை 202 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நிந்தித்தல், அச்சுறுத்தல், தேர்தல் விதிமுறைகளை மீறியமை தொடர்பிலேயே இவ்வாறான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பொலன்நறுவை கல்லேல்ல பகுதியில் இரு குழுவினருக்கு இடையில் இடம்பெற்ற மோதலில் இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்களுக் கிடையில் இந்த மோதல் ஏற்பட்டுள்ளது என்றும், அதனை சீர் செய்வதற்கு சென்றவர்கள் மீதே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வெற்றிகளை கொண்டாடுவதற்கு பேரணிகள் சென்றவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு

## கூட்டங்கள் - பேரணிகளுக்கு தடை!

கூட்டங்கள் பேரணிகள் நடத்தப்படுதல் ஆகியவற்றிற்கு மறு அறிவித்தல் வரையில் தடை விதிக்கப் பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான ருவன் குணசேகர தெரிவித்தார்.

இந்த உத்தரவுகளை மீறுவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். 2018 உள்ளூராட்சிமன்றத் தேர்தலையடுத்து தொடர்ந்து நடமாடும் பாதுகாப்பு சேவை, கலகங்களை அடக்குவதற்கான குழுக்கள், வீதித் தடைப் பாதுகாப்பு முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் அமைதியான முறையில் நடைபெற்றுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## சாயி நிலையத்தில் சிவராத்திரி தினம்

நல்லூர் நல்லலஷ்மி அவெனியுவில் அமைந்துள்ள சாயி இல்லத்தில் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 6 மணி முதல் மறுநாள் காலை 6 மணி வரை சிவராத்திரி நிகழ்வுகள் இடம்பெறும்.

தொடர்ந்து மகா மிருத்யுஞ்சய ஹோமம், அபிஷேகம், பஜனை நடைபெற்று மறுநாள் காலையில் பாரணையும் இடம்பெறும். (இ)

## பெண்களின் பங்களிப்பு தொழிற்றுறையில் அதிகரிப்பு!

இலங்கையின் மனிதவள சக்தியில் பெண்களின் பங்களிப்பு 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டில் 35.6 சதவீதத்தினால்அதிகரித்துள்ளதுஎன குடிசன மதிப்பீட்டுபுள்ளிவிபர திணைக்களம்வெளியிட்டுள்ளபுதியஆய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் இதுதொடர்பாகமேற்கொள்ளப்பட்ட ஆய்விற்கு அமைவாக பெண்களில் 31 லட்சத்து 40 ஆயிரத்து 787பேர்பணிகளில் ஈடுபட்டுள்ளமைகண்டறியப்பட்டுள்ளது.

கடந்தவருடத்தில் பெண்கள் தொழில் வாய்ப்பு 1.7 சதவீதத்திற்கும் 6 சதவீதத்திற்கும் இடையில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக நாட்டில்தயாரிப்புமற்றும் சேவை ஆகிய துறைகளில் ஆண்களிலும் பார்க்க பெண்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்களவு கூடியுள்ளது என்றும்திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.



# ரஷ்ய வானில் விமானம் வெடித்துச் சிதறியது



ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோ வான் பரப்பில் பயணிகள் விமானமொன்று வெடித்துச் சிதறியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. மொஸ்கோ அருகே உள்ள டொமோடிடோவா சர்வதேச விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட ஏ.என்–148 என்ற சாராடோவ் நிறுவனத்தின் பயணிகள் விமானம் 71 பேருடன் நடு வானில் நொறுங்கி விபத்துக் குள்ளாகியுள்ளது. இதில், பயணித்த 71 பேரும் உயிரிழந்துள்ளனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. இதில் பயணம் செய்த 71 பேரில் 65 பேர் பயணிகள்; ஏனைய 6 பேர் விமான ஊழியர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

இதேவேளை, விபத்துக் குறித்து பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.








திருநெல்வேலியில் மலிவு விலையில் சகல பொருள்களையும் கொள்வனவு செய்வதற்கு

தேனு களஞ்சியம்

(திருநெல்வேலிச் சந்தியில் நவீன சந்தையின் உட்புறமும் வெளிப்புறமும்)

சந்தை வெளிப்புறத்தில் புதிய கடை








Pearson | BTEC | University of Wolverhampton | University at Albany, State University of New York | University of Canberra | RICS | CIOB

HND — BUSINESS MANAGEMENT MARKETING | HRM — Leading to BA (Hons) from the UK Universities

HND — QUANTITY SURVEYING — Leading to BSc (Hons) from the UK Universities

HND — COMPUTING — Leading to BSc (Hons) from the UK Universities

UGC Recognized TVEC Approved

HND — BIOMEDICAL SCIENCE BIOTECHNOLOGY — Leading to BSc (Hons) from the UK Universities

HND — CIVIL ENGINEERING — Leading to BEng / BSc (Hons) from the UK Universities

LLB — LAW — Leading to LLB (Hons) from the UK Universities

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

பதிவுகள் இப்பொழுது ஆரம்பம்

Sanchu 0777 102 131
Ragavan 0777 692 318

BCAS Jaffna Campus, #. 16, Point Pedro Road, Jaffna

Platinum Partner No.1 BTEC Centre in Sri Lanka 2016 | Best Employer Brand Award 2017 | Asia's Training Excellence Award 2017

**Mount Campus**
54, Galle Road, Mt. Lavinia.
T : 011 272 8082

**Kandy Campus**
344, Peradeniya Road, Kandy.
T : 081 222 4731

**Kalmunai Campus**
392/1, Main Street, Kalmunai.
T : 067 222 6899

**Corporate Office**
32, Dharmarama Road,
Colombo 6. T : 0112597217

021 221 9910 | 011 259 7217 | info@bcas.lk | www.bcas.lk


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.02.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.